‘தமிழன்’ பத்திரிகை
வீடுகளுக்கு நேரடியாக
விநியோகிக்கப்படும்



QR ஐ ஸ்கேன் செய்து
தகவல்களை
பெற்றுக்கொள்ளுங்கள்.
0777983308

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 62 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(15.09.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 29, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## பொருளாதார மறுசீரமைப்பு

### மீளாய்வுக் கூட்டம் ஆரம்பம்



02 பக்கம்

# குற்றவாளிகள் தப்ப முடியாது!



## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் குறித்து ரணில் சூளுரை

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்காக இங்கு இரண்டு வழிகளில் விசாரணைகள் இடம்பெறவுள்ளன. அந்த விசாரணைகள் சுயாதீனமாக இடம்பெற அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகின்றேன். விசாரணைகளின் முடிவின் பிரகாரம், குற்றவாளிகள் எவராக இருப்பினும் அவர்கள் தப்பிக்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கியூபா மற்றும் அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (13) அதிகாலை நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார். அதற்கு முன்பாக ஆளுங்கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சிலரை அவர் சந்தித்து உரையாடியபோதே ஜனாதிபதி ரணில் மேற்கண்டவாறு கூறினார்.

02 பக்கம்

## முன்னாள் பிரதியமைச்சர் நிஷாந்த விளக்கமறியலில்



சட்டவிரோதமான முறையில் போலி இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்ட வாகனத்தை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில், காலி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதியமைச்சருமான நிஷாந்த முத்துஹெட்டிகமவை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி பிரதான நீதவான் இசுரு நெத்திகுமார உத்தரவிட்டுள்ளார்.

## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் உண்மையை மறைக்கும் ரணில்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்



தற்போது நாட்டுக்கு தேவை ஆரவார சத்தங்களோ மக்கள் கரகோஷங்களோ அல்லவெனவும் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் ஈடுபட்டவர்கள், பிரதான சூத்திரதாரிகளாக செயல்பட்டவர்கள், அதில் பொதிந்துள்ள அரசியல் இலக்குகள், அதை அரசியலுக்குப் பயன்படுத்திய கட்சிகள் போன்றவற்றைப் பற்றிய உண்மைதான் நாட்டுக்கு இப்போது தேவை என்றும் இதற்காக, உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக அடுத்த வாரம் இரு நாள் விவாதத்துக்கான பிரேரணையை முன்வைத்து உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை... 02 பக்கம்

## அஷ்ரப் நினைவு நிகழ்வு: மு.காவினருக்கு சிக்கல்

### சாய்ந்தமருதில் மண்டபம் வழங்க மறுப்பு; இன்று எதிர்ப்புப் பேரணி நடத்தவும் ஏற்பாடு




முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப்பின் நினைவு தினத்தை அனுஷ்டிக்கும் பிரதான நிகழ்வினை, அந்தக் கட்சியினர் சாய்ந்தமருது லி மெரிடியன் தனியார் மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ள நிலையில், நிகழ்வை நடத்துவதற்கு வேறு இடமொன்றினை பார்க்குமாறு மண்டபத்தை பதிவு செய்தோருக்கு மண்டப நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

குறித்த நிகழ்வை சாய்ந்தமருதில் நடத்துவதற்கு அந்த ஊரில் பாரிய எதிர்ப்பு... 02 பக்கம்

## பொறுப்புக்கூறலுக்கு சர்வதேச பொறிமுறை

### பேர்ள் அமைப்பு வலியுறுத்து

இலங்கையின் குற்றவாளிகளை பொறுப்புக்கூற செய்வதற்கு சர்வதேச மயமாக்கப்பட்ட பொறிமுறைகளை சர்வதேச சமூகம் பயன்படுத்தவேண்டும் என இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்துக்கான மக்கள் அமைப்பு - பேர்ள் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 54ஆவது அமர்வின் ஐக்கிய... 02 பக்கம்

PEARL

## கோழி இறைச்சி முட்டை விலை குறையும்

### அமைச்சர் மஹிந்த அமரவீர



அடுத்த வருடம் முதல் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகள் வீழ்ச்சியடையும் எனவும் மீண்டும் விலை அதிகரிப்பு ஏற்படாது எனவும் கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இதன்படி, அடுத்த வருடம் முதல் முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (14) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார்.

02 பக்கம்

## போசாக்கு தேவைக்காக மாகாண சபைகளுக்கு 16.6 பில்லியன் ரூபா

### நிதி ஆணைக்குழு

மாகாண சபைகள் இயங்காத இந்தக் காலப்பகுதியில் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் பணத்தை வெளிப்படைத் தன்மையுடன் பயன்படுத்துமாறு, வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு நிதி ஆணைக் குழுவை அறிவுறுத்தியது.

குறித்த குழு பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்திராரச்சி தலைமையில் அண்மையில் கூடியபோதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மாகாண சபைகள் சுதந்திரமாக செயற்படக்கூடிய வகையில் கட்டியெழுப்பப்பட வேண்டுமெனக் குழுவின் தலைவர் வலியுறுத்தினார். எனவே, அவற்றின் முன்னேற்றத்துக்குக் காணப்படும் தடைகளை இனங்கண்டு முன்வைக்க வேண்டிய பொறுப்பு நிதி ஆணைக்குழுவுக்கு உண்டு எனவும் தலைவர் தெரிவித்தார்.

மாகாண சபைகள் செயற்படாத காலப்பகுதியில் மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி ஆணைக்குழுவின் அதிகாரிகள் சுட்டிக் காட்டினர். 02 பக்கம்

## அலி சப்ரி ரஹீம் எம்.பி. மீது மற்றொரு குற்றச்சாட்டு

### சட்டவிரோதமாக காணி ஆக்கிரமிப்பென தகவல்



புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அரசாங்கத்துக்குச் சொந்தமான 214 ஏக்கர் காணியை பல வருடங்களாக சட்டவிரோதமாக பயன்படுத்தி வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே இது தெரிய வந்துள்ளது. மேலும், அந்தக் காணியை தனியார் நிறுவனம் ஒன்று... 02 பக்கம்

## லிபியாவில் உயிரிழப்புகள்

### 40,000ஐ விட அதிகரிக்கலாமென அச்சம்



12பக்கம்

### கமெண்ட் கந்தர்...



என்னடாப்பா முஸ்லிம் காங்கிரஸுக்கு வந்த சோதனை.. அதுவும் கிழக்கு மண்ணில...

## துறைமுக நகர உணவுக் கூடங்கள் 2027 இல் அகற்றப்படும்

### பொருளாதார ஆணைக்குழு அரச நிதி பற்றிய குழுவில் தெரிவிப்பு





பொழுதுபோக்கு அம்சத்தின் கீழ் கொழும்புத் துறைமுக நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள உணவுக் கூடங்கள் 2027ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் அகற்றப்படும் என கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். குறிப்பாக வெளிநாட்டை இலக்குவைத்து வடிவமைக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரத்தில் இதுபோன்ற உணவுக் கூடங்கள் அமைக்கப்பட்டிருப்பதன் சட்ட ஏற்பாடுகள் குறித்து அரசாங்க நிதி பற்றிய குழு வினவியமைக்குப் பதிலளிக்கும்... 02 பக்கம்

### உஷ்



ரணில் நாடு திரும்பிய பின்னர் அமைச்சரவை மாற்றம் நடக்கவுள்ளதாக பேச்சு அடிபடுகிறது.

வஜிர அபேவர்தன கைத்தொழில் அமைச்சராகவும் ஜோன்ஸ்டன் நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும் அனுர பிரியதர்ஷன யாப்பா சுகாதார அமைச்சராகவும் மஹிந்தானந்த விளையாட்டுத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்படலாமென பேச்சு அடிபடுகிறது.

# அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்கள் கைது

கனகராசா சரவணன்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 17 பேர் நேற்று வியாழக்கிழமை (14) அதிகாலை கைது செய்யப்பட்டதாக காங்கேசன்துறை வடக்கு கடற்படையினர் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை வடக்கு கடற்படையினர் நேற்று அதிகாலை 1 .30 மணியளவில் கடல் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 17 இந்திய மீனவர்களை கைது செய்ததுடன் 3 படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

## பொருளாதார மறுசீரமைப்பு...

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட புதிய பொருளாதார மறுசீரமைப்புகளில் இதுவரை அமுல்படுத்தப்பட்டுள்ள



விடயங்கள் தொடர்பான முதலாவது முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்று (14) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இன்று முதல் இரு வார காலத்துக்கு இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ள நிலையில் அதன் இறுதி அமர்வு செப்டெம்பர் 26 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெறும். நேற்று இடம்பெற்ற சந்திப்பில் இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தலைமை நிர்வாக அதிகாரி பீடர் புருவர் (Peter Breuer), பிரதி நிர்வாக அதிகாரி கட்யா ஸ்விரிசென்கா (Katya Svirydzenka), மைக் லீ (Mike Li), சோபியா சென்ங் (Sophia Zhang), டிமித்ரி ரொஷ்கோவிஷ் (Dmitriy Rozhkov), நோடா செலீம் (Noda Selim), சந்தேஷ் துன்கானா (Sandesh Dhungana), நூயி மியோ (Nui Miao), ஜோயி டர்கேவிட்ஸ் (Joei Turkewitz), நுவோன்க் லூன் வூ (Nuong Lan Vu) ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்ததோடு, மார்க் எடம்ஸ் Mark Adams இணைய வழியாக கலந்துகொண்டார்.

## பொறுப்புக்கூறலுக்கு...

நாடுகள் மனித உரிமை அலுவலகத்தின் இலங்கை குறித்த அறிக்கை மீதான கலந்துரையாடல்களின் போது போள் அமைப்பு தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றை நினைவுகூர்ந்துள்ளது.

நீதிக்கான முயற்சிகள் இலங்கை அரசாங்கத்தினதும் மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகளினதும் விருப்பத்திலேயே தங்கியுள்ளது என மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது.

எனினும் இலங்கையின் தொடர்ச்சியான ஆட்சியாளர்கள் தங்கள் நடவடிக்கைகள் குறித்தும் பாதுகாப்பு படையினர் குறித்தும் சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்க மறுத்துள்ளனர்,தவறியுள்ளனர் என பேர்ள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் ஆழமாக வேரூன்றிய சிங்கள பௌத்த பெரும்பான்மைவாதம் இலங்கையின் அரசியல் நிலப்பரப்பின் பின்னணியில் முக்கிய உந்துசக்தியாக செயல்படுகின்றது. இலங்கையில் உறுதியற்ற தன்மையையும் தண்டனையின்மையையும் தொடர்ந்தும் உருவாக்கி வருகின்றது. தமிழர்களை தொடர்ந்தும் ஒடுக்கிவருகின்றது எனவும் பேர்ள் தெரிவித்துள்ளது.

இது காணி அபகரிப்பு துரிதமாக இடம்பெறுவதற்கும் வடகிழக்கில் சிங்கள பௌத்தமயமாக்கல் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கும் காரணமாக அமைந்துள்ளது என தெரிவித்துள்ள பேர்ள் சமீபத்தில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை நீதியும் பொறுப்புக்கூறலும் சாத்தியமாகும் வரை கடந்தகாலங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொடர்ந்தும் மன உளைச்சலை கொடுக்கும் என்பதை நினைவூட்டுகின்றது எனவும் பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் சமீபத்தைய அறிக்கை அதன் முடிவுகள் பரிந்துரைகளை முற்றாக நிராகரித்துள்ளது என தெரிவித்துள்ள பேர்ள் அமைப்பு இலங்கையின் குற்றவாளிகளை பொறுப்புக்கூற செய்வதற்கு சர்வதேசமயமாக்கப்பட்ட பொறிமுறைகளை பயன்படுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் தொடர்ந்தும் அழைப்பு விடுப்பதாகவும் பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

நீதியும் பொறுப்புக்கூறலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வும் இல்லாத பட்சத்தில் சிங்கள பெரும்பான்மையினவாதம் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்படாததாக காணப்படும் இனமோதலுக்கான அடிப்படை காரணங்களுக்கு தீர்வு காணப்படாத நிலை நீடிக்கும் ஸ்திரதன்மையற்ற சூழல் காணப்படும்.மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் இலங்கையில் நெருக்கடிகள் தொடரும் எனவும் பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

## குற்றவாளிகள்...

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், நான் நாட்டின் தலைவர். நாட்டுக்கும் அரசுக்கும் அபகீர்த்தி ஏற்பட ஒருபோதும் இடமளியேன்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் புதிதாகக் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்ட தரப்பினர் தங்கள் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். அது அவர்களின் கருத்துச் சுதந்திரம். அதில் நான் தலையிடமாட்டேன்.

எனினும், அந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் குழுவொன்றை நியமிக்கவுள்ளேன். அதேவேளை, பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றும் நியமிக்கப்படவுள்ளது.

இந்த இரு குழுக்களின் விசாரணை அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இதில் ஒளிவுமறைவு எதுவும் இருக்காது. இந்த விவகாரத்தைக் கையிலெடுத்து அரசுக்கு எதிராக எதிரணிகள் அரசியல் செய்கின்றன.

எந்த நடவடிக்கையாலும் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது. அன்று சர்வதேச விசாரணைக்கு எதிராகக் கோஷம் எழுப்பிய ஒருசில தரப்பினர், இன்று சர்வதேச விசாரணை வேண்டுமெனக் கோருவது வேடிக்கையாகவுள்ளது. எந்த விசாரணை நடந்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## அஷ்ரப் நினைவு நிகழ்வு:...

உள்ளமையையும் நிகழ்வை நடத்துவதற்கு மண்டபத்தை வழங்கினால் பிரச்சினைகள் ஏற்படும் என்பதையும் மண்டபத்தை பதிவு செய்தோருக்கு தாம் தெரியப்படுத்தி, வேறு இடமொன்றைப் பார்க்குமாறு கூறியுள்ளதாக லீ மெரிடியன் மண்டப நிருவாகி ஊடகமொன்றிடம் தெரிவித்துளளார்.

அஷ்ரப் நினைவு நிகழ்வை நாளை 16ஆம் திகதி சாய்ந்தமரு லீ மெரிடியன் மண்டபத்தில் நடத்துவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்துள்ள நிலையிலேயே, இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது.

சாய்ந்தமருது பிரதேசத்துக்கு நகர சபையொன்றைப் பெற்றுத் தருவதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் வாக்குறுதி வழங்கி விட்டு - பின்னர் ஏமாற்றியமையினால், முஸ்லிம் காங்கிரஸுக்கு சாய்ந்தமருது மக்கள் தமது எதிர்ப்பை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றனர்.

இதேவேளை மருதூர் மக்களின் உணர்வுகளோடு விளையாட நினைக்கும் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் நாடகத்துக்கெதிரான எழுச்சிப்பேரணி இன்று ஜும்ஆத் தொழுகையின் பின்னர் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சாய்ந்தமருது-மாளிகைக்காடு மக்கள் எழுச்சி மய்யம் அறிவித்துள்ளது.

## அலி சப்ரி ரஹீம் எம்.பி. மீது...

உப்பு உற்பத்திக்காக பயன்படுத்தியிருப்பதும் வெளியானது.

மேலும், சுமார் 14 வருடங்களாக இந்தக் காணியிலிருந்து அரசாங்கத்துக்கு வரி செலுத்தப்படாமையால் சுமார் 20 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவினருக்கு அறிவிக்கப்படும் என புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிந்தக்க மாயதுன்ன தெரிவித்தார்.

## போசாக்கு தேவைக்காக...

2024ஆம் ஆண்டுக்கான மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் குழந்தைகளின் போசாக்குத் தேவைக்காக 16.6 பில்லியன் ரூபாவை ஒதுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதற்கமைய, மாகாண சபைகளுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, அதேவேளை மாகாண சபைகளில் எவ்வாறான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது குறித்து குழுவுக்கு அறிவிக்குமாறும் அதன் தலைவர் பணிப்புரை விடுத்தார். பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் கருத்துத் தெரிவித்த தலைவர், பொலிஸ் திணைக்களம் தொடர்ந்தும் மக்கள் நட்புறவான நிறுவனமாக செயற்படுவது அத்தியாவசியமானது என்றும் இதற்கமைய அரசியல்வாதிகளிடம் இருந்து பொலிஸ் வேறுபடுத்தப்பட வேண்டும் என்றும் தலைவர் வலியுறுத்தினார்.

பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை முன்னெடுப்பதில் பாரிய மனிதவளப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளமை தொடர்பில் தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.இதன்படி, பொலிஸ் ஆணைக்குழுவின் தற்போதைய முன்னேற்றம் குறித்தும், எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் உள்ளடங்கிய அறிக்கையொன்றைத் தயாரித்து அதனைக் குழுவிடம் ஒப்படைக்குமாறும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது.இக்கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான டபிள்யூ.டி. ஜே. செனவிரத்ன, சமிந்த விஜேசிறி, மொஹமட் முஸம்மில், ரோஹண பண்டார, குணதிலக ராஜபக்ஷ மற்றும் அரசாங்க அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## கோழி இறைச்சி, முட்டை விலை...

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர,

“கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியில் நம்நாடு தன்னிறைவு பெற்றிருந்தாலும் கடந்த காலங்களில் ஏற்பட்ட கொவிட் நோய்த் தொற்று நிலைமையும் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் மற்றும் கால்நடைத் தீவன உற்பத்தி குறைந்ததன் விளைவாகவும் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி குறைந்தது.

சுமார் 3,420,000 புதிய கோழிக் குஞ்சுகள் தற்போது கோழிப் பண்ணைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் பெரும்பாலும், அந்தக் கோழிகள் டிசம்பர் மாதத்துக்குள் முட்டையிடும் பருவத்துக்கு வளர்ந்துவிடும்.

எனவே எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குப் பின்னர், இந்த நாட்டில் முட்டை உற்பத்தி மேலும் அதிகரிக்கும் என குறித்த தொழிற்றுறையினர் தெரிவித்துள்ளனர்.

கோழிப் பண்ணைகளுக்குத் தேவையான தீவன உற்பத்திக்காக சோளத்தை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பை இந்தத் தொழிற்றுறையினருக்கு வழங்கியுள்ளோம். எதிர்காலத்தில் எமது மக்கள் இதன் மூலம் பயனடைவார்கள்.

இடைக்கால, கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் படி, வட மாகாணத்தில் கால்நடை வளத்தை மேம்படுத்தும் பணிகளை வலுவூட்டுவதற்கான திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்காக செலவிடப்பட்ட தொகை 37 மில்லியன் ரூபாவாகும்.

சிறிய மற்றும் நடுத்தரக் கோழிப் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒரு நாள் வயதுடைய நாட்டுக் கோழிக் குஞ்சுகளை வழங்குதல், கிராமப்புறங்களில் முட்டை உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் போசாக்கை அதிகரிப்பது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதற்காக 48 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் தொற்று காரணமாக, உள்நாட்டுக் கோழி இறைச்சி உற்பத்தி 30% சதவீதத்தினால் குறைந்துள்ளது.

ஆனால், தற்போது பிராய்லர் கோழிக் குஞ்சுகள் அதிக அளவில் பண்ணைகளுக்கு சேர்க்கப்படுவதால், இந்த ஆண்டு இறுதிக்குள், நம் நாட்டின் கோழி இறைச்சி உற்பத்தி, முந்தைய நிலைக்கு திரும்பலாம் என குறித்த தொழிற்றுறையினர் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக இந்த ஆண்டு இறுதிக்குள் கோழி இறைச்சி மற்றும் முட்டை விலை மேலும் குறையலாம் என எதிர்பார்க்கப்டுகின்றது.

நாட்டில் கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னுரிமைப் பணியாகக் கருதி, அவற்றைத் துரிதப்படுத்த கமத்தொழில் அமைச்சு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இதன் கீழ், சிறிய மற்றும் நடுத்தரப் பண்ணைகளின் அபிவிருத்தியை ஊக்குவித்தல், உற்பத்தியை மேம்படுத்தல், இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதியை ஊக்குவித்தல், உயர்தர கன்றுகளை இறக்குமதி செய்தல், புற்தரைகளைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்தல், கால்நடைத் தீவன உற்பத்தியை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், கடந்த காலங்களில் ஏற்பட்ட கொவிட் நோய்த் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டின் முட்டை உற்பத்தியும் 50% சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

கால்நடைத் தீவன உற்பத்தி குறைவு, கால்நடைத் தீவன இறக்குமதிக்கான அந்நியச் செலாவணி இல்லாமை, உள்நாட்டு சோள உற்பத்தி குறைவு போன்றவையே இந்த உள்நாட்டு முட்டை உற்பத்திக் குறைவுக்கு முக்கிய காரணங்களாகும்.

ஆனாலும் தற்போது சோள இறக்குமதிக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் காரணமாக, கோழிப்பண்ணைகளில் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி அதிகரித்து வருகிறது. மேலும், அடுத்த 03 மாதங்களில் முட்டை உற்பத்தியை முன்னர் இருந்த நிலைக்கு உயர்த்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பால் உற்பத்தியில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்காக குறுகிய மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதன் கீழ், 2023 முதல் 2028 வரையான ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று தேசிய பால் உற்பத்திக் கொள்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பால் பண்ணைகளை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக உற்பத்தித்திறனை மேம்படுத்தல், புற்தரைகளைப் பாதுகாத்தல் மற்றும் அதிக போசாக்குள்ள புல் வகைகளைப் பயிரிடுதல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், நாடளாவிய ரீதியில் இயங்கும் அரச கால்நடைப் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதுடன், இந்தத் தொழிற்றுறையின் அபிவிருத்திக்கு அதிக பங்களிப்புகளை வழங்கும் தனியார் கால்நடைப் பண்ணைகளை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், அதிகளவில் பால் தரக்கூடிய கறவை மாட்டினங்களைத் தேர்ந்தெடுத்து இனப்பெருக்கம் செய்யவும் நமது நாட்டு சூழலுக்கு ஏற்ற கறவை மாடுகளை இறக்குமதி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதற்கு இணையாக எமது நாட்டுக்குத் தேவைக்கான ஆட்டுப் பால் உற்பத்தியை மேம்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை செயற்படுத்தி வருகின்றோம்” என்று அவர் தெரிவித்தார்.

## துறைமுக நகர உணவுக்...

வகையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ த சில்வா தலைமையில் அண்மையில் (12) கூடியபோதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது. இதில் எதிர்வரும் 19ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் குறித்து ஆராயப்பட்டன.

எந்த சட்ட அடிப்படையில் அவ்வாறான உணவுக் கூடங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கினீர்கள், எந்த அடிப்படையில் அவற்றை 2027ஆம் ஆண்டு அகற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளீர்கள் என அரசாங்க நிதி பற்றிய குழு, ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் வினவியது. இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டதா என்றும் கேள்வியெழுப்பியது.

இது விடயம் தொடர்பான தகவல்களைக் கூடிய விரைவில் குழுவில் சமர்ப்பிக்குமாறு கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

துறைமுக நகரத்தில் தற்பொழுது முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளால் அரசாங்கத்துக்குக் கிடைத்திருக்கும் வருமானம் தொடர்பிலும் குழு மேலும் கேள்வியெழுப்பியது. எனவே, குறித்த ஒழுங்குவிதிக்கு அனுமதி வழங்க முன்னர் முழுமையான புரிதலை ஏற்படுத்திக் கொள்ள சம்பந்தப்பட்ட சகல தகவல்களையும் வழங்குமாறும் குழு அறிவுறுத்தல் வழங்கியது.

ஸ்மார்ட் சிட்டி எண்ணக்கருவுக்கு அமைய தனியான நிலப்பரப்பில் துறைமுக நகரம் அமைக்கப்பட்டிருக்கும் நிலையில், ஸ்மார்ட் சிட்டியில் கழிவுநீர் முகாமைத்துவம், புதுப்பிக்கத்தக்க சக்தி, உரிய வடிகாலமைப்புக்கான பொறிமுறைகள் காணப்படுகின்றனவா என்றும் குழு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் வினவியது. கழிவுநீர் முகாமைத்துவம் மற்றும் வடிகாலமைப்புத் தொடர்பில் நாட்டின் ஏனைய பகுதிகளில் கிடைத்த அனுபவம் துறைமுக நகரத்தை அமைக்கும்போது தவிர்க்கப்பட வேண்டும் என்பது குழுவின் நிலைப்பாடாக இருந்தது.

அத்துடன், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, நீர்வழங்கல் சபை போன்ற அரசாங்க நிறுவனங்கள் துறைமுக நகரின் கட்டுமானம் மற்றும் அபிவிருத்தியில் பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டமையும் இங்கு தெரியவந்தது. இவை அனைத்தும் வரி செலுத்தும் நாட்டு மக்களின் பணம் என்பதால் இதனால் நாட்டுக்குக் கிடைக்கும் நன்மைகள் யாவை என்றும் குழு கேள்வியெழுப்பியது.

இதற்கமைய துறைமுக நகரம் மற்றும் உட்கட்டமைப்புக்கு அரசாங்கம் மேற்கொண்ட செலவுகளின் வகைப்படுத்தல் மற்றும் வருமானம் கிடைக்கும் மார்க்கங்கள் பற்றிய விபரங்களை வழங்குமாறும் அரசாங்க நிதி பற்றிய குழு, ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியது.

இக்கூட்டத்தில், இராஜாங்க அமைச்சர் (வைத்தியகலாநிதி) சீதா அரம்பேபொல, பாராளுமன்ற உறுப்பினர்களான சந்திம வீரக்கொடி, நிமல் லன்சா, (கலாநிதி) பிரதீப் உந்துகொட, பிரேம்நாத் சி தொலவத்த, மதுர விதானகே, யூ.கே.சுமித் உடுகும்புர ஆகியோர் கலந்துகொண்டனர்.

## உயிர்த்த ஞாயிறு தின...

அரசாங்கத்திடம் கேட்டபோது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பின்பற்றியது போலவே இரகசியங்கள் மறைந்திருக்கும் இரண்டாவது மற்றும் மூன்றாவது பாகங்களை எதிர்க்கட்சித் தலைவருக்குக் கூட கிடைக்காத வகையில் தற்போதைய ஜனாதிபதியும் மறைத்துள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் பாடசாலை பஸ் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் 77 ஆவது கட்டமாக களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு 50 இலட்சம் ரூபா பெறுமதியான பஸ் வழங்கும் நிகழ்வு நேற்று (14) இடம்பெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,இரகசியமான மற்றும் உணர்ச்சிகரமான விடயங்கள் என்று கூறி தற்போதைய ஜனாதிபதியும் உண்மையை மறைத்து வருகின்றார். மக்களுக்குப் போலவே எதிர்க்கட்சித் தலைவரால் கூட வாசிக்க முடியாத வகையில் மறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மறைப்பதால் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி செயற்பட்டதைப் போன்றே தற்போதைய ஜனாதிபதியும் உண்மையை மறைத்து செயற்பட்டு வருகிறார்.

இதன் காரணமாக எனது பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.இந்த உண்மையை தெரிந்து கொள்வது தனிநபர்களுக்கு சேறு பூசுவதற்கல்ல. உண்மைகளை மக்களுக்கு வெளிப்படுத்துவதற்கேயாகும். சேறு பூசும் அரசியல் கலாசாரத்தை நாம் ஒருபோதும் கடைப்பிடிப்பதில்லை. இவ்வாறே உண்மை தொடர்ந்தும் மறைக்கப்பட்டால் மதங்களுக்கும் இனங்களுக்கும் இடையே ஒற்றுமையின்மை உருவாகலாம் என்பதனால், இதனை வெளிப்படுத்த வேண்டும். உண்மையை மறைக்கும் அரசாங்கமே தற்போது நாட்டில் செயற்பட்டு வருவதனால் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் பதவி தராதரங்கள் இன்றி சேறுபூசும் அநாகரிக அரசியலை நடைமுறைப்படுத்தாது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு காரணமான அனைத்து விடயங்களும் மக்களுக்கு வெளிப்படுத்தப்படும்.

இந்நாட்களில் பலர் வெறுக்கத்தக்க உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மனதில் கொண்டுள்ளனர். இது தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இந்த விடயத்தில் ஒரு நாடு என்ற வகையில் நாம் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். இதனால் வெளிப்படையான மற்றும் பக்கச்சார்பற்ற சுயாதீன விசாரணை தேவை.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய முக்கியமான வாக்குறுதியானது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் ஈடுபட்ட அனைவரையும் வெளிப்படுத்தி அவர்களை நீதியின் முன் நிறுத்துவதாகும். இதனால் அவருக்கு மகத்தான மக்கள் ஆணை கிடைத்தபோதிலும்,அவர் ஆட்சிக்கு வந்த நாள் முதல்,உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மையை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக அதை மூடிமறைக்கவே ஒவ்வொரு நொடியும் செயற்பட்டார் .

இதன் மூலம் நாட்டில் இன பேதம், முரண்பாட்டை ஏற்படுத்தும் விதமாக செயற்பட்டார். கொவிட் காலத்தில் தகனமா அல்லது அடக்கமா தொடர்பான பிரச்சினையின் போது கூட, அவர் நாட்டின் இனங்களைப் பிளவுபடுத்துவதற்காகவே பணியாற்றினார் .

நம் நாட்டு அரசியலில் 3 தரப்புகள் உள்ளன. அதில் ஒன்று பொய் சொல்லி ஆட்சியைப் பிடித்து நாட்டின் பணத்தையும் மக்களின் பணத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு இலஞ்சம், ஊழல், மோசடி, திருட்டு போன்றவற்றைச் செயல்படுத்தி குடிமக்களை போஷிப்பதை விடுத்து தாம் கோடீஸ்வரர்களாகி குடும்ப அரசியலுக்குள் தங்களுக்கு நாட்டை சுதந்திரமாக எழுத முயல்கின்ற தரப்பினர்.

இரண்டாம் தரப்பு எந்த பிரச்சினைக்கும் அவர்களிடம் தீர்வில்லாத தரப்பு. சர்ச்சைகளையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தி சமூகத்தை பிளவுபடுத்தி இதனூடாக அரச அதிகாரத்தை பெற முயற்சிக்கும் தரப்பினர்.

இந்த இரண்டு தரப்பினரையும் தவிர்த்து,3 ஆவது தரப்பாக ஐக்கிய மக்கள் சக்தியானது தேசியத் தேவைகளின் அடிப்படையில் தேசநலனை முன்னிலையாகக் கொண்டு தேசிய நிகழ்ச்சி நிரலை தயாரித்து அரச அதிகாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஆற்றல் மற்றும் திறமையின் அடிப்படையில் நாட்டுக்காக பணியாற்றும் தரப்பாக செயலாற்றி வருகிறது.

75 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் எந்த எதிர்க்கட்சியும் செய்யாத சேவையை கடந்த 3 ஆண்டுகளில் ஐக்கிய மக்கள் சக்தி செய்துள்ளது. இதன் கீழ் 56 அரச வைத்தியசாலைகளுக்கு 1719 இலட்சம் ரூபா பெறுமதியான வைத்தியசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. 77 பாடசாலைகளுக்கு 374 மில்லியன் ரூபா பெறுமதியான பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்பத் திட்டத்தின் கீழ் 33 பாடசாலைகளுக்கு 290 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான சேவையை ஆற்றிய எதிர்க்கட்சி வேறெதுவும் இல்லை.

குறைபாடுகள், பிரச்சினைகள் எங்கு இருக்கிறதோ அங்கு விமர்சன அரசியலுக்கு மாத்திரம் மட்டுப்படாமல் அந்த பிரச்சினைகளுக்கு ஓரளவேனும் தீர்வுகளை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி செயற்படுகின்றன.ஏனைய கட்சிகளைப் போல,பெற்ற உபகாரங் களை தீவுகளிலும் நட்பு வட்டார முதலாளித்துவ நிறுவனங்களிலும் முதலீடு செய்யவில்லை. சமூகப் பொறுப்பு,சமூகக் கடமை, தேசியப் பொறுப்பு ஆகியவற்றை முன்னிறுத்தி மக்களின் நலனுக்காகவே இதுவரை கிடைக்கப்பெற்ற பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

திருட்டு, மோசடி, ஊழல் இல்லாமல் இந்த வேலையைச் சரியாகச் செய்தால், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களும் செல்வந்தர்களும் உதவுவார்கள். எதிர்க்கட்சியால் செயல்படுத்தப்படும் பிரபஞ்சம் மற்றும் மூச்சுத் திட்டங்களுக்கு மேற்குறித்தவர்களே பணம் வழங்குகின்றனர்.

இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் சிறந்த வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்படுவதால், அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியை நம்புகிறார்கள். இந்த முறையின் கீழ் எதிர்காலத்தில் டொலர் பிரச்சினைக்கு கூட தீர்வு காண முடியும் என்றும் தெரிவித்தார்.





கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் களனியில் உள்ள நாக்கந்த சர்வதேச பௌத்த கல்வி நிலையத்தில் கருத்தரங்கொன்றை 13ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது பாகிஸ்தானில் உள்ள பௌத்த சமயம் சம்பந்தமான கந்தஹார் பிராந்திய நூதனசாலைப் பொருட்கள் மற்றும் கலாசார கண்காட்சியும் இடம்பெற்றது. மேலும் பாகிஸ்தான் - இலங்கை பௌத்த யாத்திரிகர்கள் பாகிஸ்தானுக்கு சுற்றுலா சென்று அங்கு தங்கி நூதனசாலைகள், மரபுரிமைப் பிரதேசங்களை பார்வையிட உரிய வசதிகள் சம்பந்தமான ஒப்பந்தமொன்றும் இருநாடுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்டது. இந் நிகழ்வுக்கு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாருக் புல்கி தலைமை வகித்தார்.

# நீதிபதி இளஞ்செழியனின் தாயார் காலமானார்



வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின் தாயார் சிவபாக்கியம் மாணிக்கவாசகர் (வயது 86) உயிரிழந்துள்ளார்.

தனது இரண்டாவது மகனான வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின் கொழும்பு வீட்டில் வசித்து வந்த நிலையில் நேற்று (14.09.2023) காலை 7 மணியளவில் அவர் உயிரிழந்தார்.

இவர் யாழ். வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபர் என்பதுடன் அதே பாடசாலையில் ஆசிரியராக மற்றும் அதிபராக 35 ஆண்டுகள் பணியாற்றியுள்ளதுடன், காலம் சென்ற ஆசிரியர் மாணிக்கவாசகரின் மனைவி என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரின் உடல் இன்றும் நாளையும் கொழும்பு ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் எடுத்து செல்லப்பட்டு கேணியடி கொக்குவில் மேற்கில் உள்ள இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை(17) அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை(18) காலை 08 மணிக்கு இறுதிக்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு 02 மணிக்கு தகனக்கிரியைக்காக உடல் சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என உறவினர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் நிதியத்தை கொள்ளையடிக்க அரசு திட்டம்

## கேகாலை எம்.பி. சுஜித் சஞ்சய் பெரேரா



நாட்டின் தேயிலை கைத்தொழில் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன் தற்போதைய ஜனாதிபதிக்கு தேயிலை கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் திட்டம் எதுவும் இல்லை எனவும் இலங்கையில் தேயிலை கைத்தொழில் இன்னும் சிறிது காலத்தில் இல்லாது போகலாம் என்றும் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய் பெரேரா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் மேலும் கூறியதாவது,

சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் பல பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் 2500 ரூபாவுக்கு உரத்தை பெற்று வந்தனர். தற்போது உரம் 11,500 முதல் 12,000 வரை சென்றுள்ளது. 8000 ரூபாவுக்கு உரம் இருப்பதாக அரசாங்கம் அறிவித்தபோதும் உரத்தின் விலை 11,500 முதல் 12,000 வரை உயர்ந்துள்ளது.

தேயிலை சக்தி நிதியத்தைக் கலைத்துவிட்டு, சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் முதலில் முதலீடு செய்த 10 ரூபா பங்குத் தொகையை மட்டும் வழங்க அரசாங்கம் தயாராகி வருகிறது. சிறு தேயிலை உரிமையாளர்களின் நிதியை கொள்ளையடிக்கும் நிலைக்கு அரசாங்கம் வந்துள்ளது.

சஜித் பிரேமதாச ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மாட்டார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார கூறுகிறார். அதனை எதிர்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம். ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மேளனத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பதவி ரங்க பண்டாரவிடமிருந்து பறிபோகலாம் என்றும் சுஜித் சஞ்சய் பெரேரா தெரிவித்தார்.

# புதிய 2 சட்டமூலங்கள் நடைமுறைக்கு வந்தன



இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் மற்றும் வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் ஆகியவற்றை சான்றுரைப் படுத்தினார் சபாநாயகர்.

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் மற்றும் வங்கித் தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலங்கள் ஆகியவற்றில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனது கையொப்பத்தை இட்டு நேற்று (14) சான்றுரைப்படுத்தினார்.

இலங்கைமத்திய வங்கி சட்டமூலம் கடந்த ஜூலை மாதம் 20ஆம் திகதி குழுநிலையில் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுடன் மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. வங்கித் தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் வாக்கெடுப்பு இன்றி ஜூலை மாதம் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதற்கமைய, 2023ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி சட்டம் மற்றும் 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என்ற பெயரில் இச்சட்டங்கள் நடைமுறைக்கு வருகின்றன.

சபாநாயகர் சான்றுரைப்படுத்தும் நிகழ்வில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன மற்றும் சட்டவாக்கப் பணிப்பாளரும் தொடர்பாடல் பதில் பணிப்பாளருமான ஜனகாந்த சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.



'பிரபஞ்சம்' பாடசாலை பஸ் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 77ஆவது கட்டமாக களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு 50 இலட்சம் ரூபா பெறுமதியான பஸ் வழங்கும் நிகழ்வு நேற்று (14) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நடைபெற்றது.

# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 29ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்:** அதிர்ஷ்டத்தினை சோதித்து பணத்தை இழப்பீர்கள். மனதை சமாதானப்படுத்திக் கொள்ளுங்கள்.

**ரிஷபம்:** வீடு, வாகனத்தால் வீண் செலவுகள் அல்லது தொல்லைகள் ஏற்படும். தாயின் ஆசியினை பெற்றுக் கொள்ளுங்கள்.

**மிதுனம்:** நீண்ட நாள் முயற்சி வெற்றியைக் கொடுக்கும். நண்பர் உறவினர் தொடர்பால் நன்மைகள் உண்டு.

**கடகம்:** வாய் வார்த்தைகளை நிதானமாகப் பிரயோகியுங்கள். கடன் கொடுப்பதும் வாங்குவதும் சிக்கலைத் தரும்.

**சிம்மம்:** அலைச்சலும் செலவுகளும் நிறைந்த நாள். மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும்.

**கன்னி:** நினைத்த காரியத்தை சிரமமின்றி முடிப்பீர்கள். உடல் பலம், மன நலம் சிறப்பாக இருக்கும்.

**துலாம்:** குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம். தேவையற்ற பயணங்களால் வெறுப்படைவீர்கள்.

**விருச்சிகம்:** தொழில் ரீதியில் உங்களுக்கு பாராட்டுகள் கிடைக்கும். விரும்பிய பெண் உறவால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**தனுசு:** புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும் திட்டமிட்ட காரியங்களிலும் சாதனை செய்வீர்கள்.

**மகரம்:** வெளிநாட்டுப் பயணம் நினைத்தது போல நிறைவேறும். உங்கள் சொத்துகளின் மீது கவனம் செலுத்துங்கள்.

**கும்பம்:** ஆலோசிக்காது முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். கோபத்தால் பொருமை இழந்துவிடாதீர்கள்.

**மீனம்:** நினைத்த காரியத்தில் வெற்றி. நீங்கள் கேட்ட கடன் இன்று கிடைக்கும்.

**திதி:** அமாவாசை மு.ப.7.09 வரை பின் பிரதமை
**நட்சத்திரம்:** உத்திரம் முழுவதும்
**யோகம்:** சித்த யோகம்
**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** மு.ப. 6.01 - 7.01 மணிவரை
**ராகு காலம்:** 10.31 – 12.01 மணிவரை
**எமகண்டம் :** 3.01 - 4.31 மணிவரை
**குளிகை :** 7.31 - 9.01 மணிவரை
**சந்திராஷ்டமம்:** மகர-கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிர்ஷ்டம்:** பரணி, பூரம், பூராடம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# நாமல் மீதான பண மோசடி வழக்கு ஒத்திவைப்பு

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி மீள அழைப்பதற்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று (14) உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றிய போது சட்டவிரோதமாக சம்பாதித்த 15 மில்லியன் ரூபா நிதியை ஹெலோகோப் நிறுவனத்தில் முதலீடு செய்தமை ஊடாக பண மோசடி செய்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு நேற்று கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தது.

இந்த விசாரணை தொடர்பான சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

இதன்படி, குறித்த முறைப்பாட்டை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி மீண்டும் அழைத்து உத்தரவிட்ட நீதவான், அன்றைய தினம் விசாரணைகளின் முன்னேற்றத்தை அறிவிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# தமிழ்க் கைதியின் தலையில் துப்பாக்கி வைத்து கொலை மிரட்டல் விடுத்த வழக்கு

## லொஹான் ரத்வத்தைக்கு பிணை

மதுபோதையில் இரவுநேரம் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று, தமிழ் அரசியல் கைதிகளின் தலையில் கைத்துப்பாக்கியை வைத்து கொலைமிரட்டல் விடுத்த, அப்போதைய சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் எவிந்த ரத்வத்தவை இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு அநுராதபுரம் பிரதான நீதவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி நாலக சஞ்சீவ ஜயசூரிய நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபரான தற்போதைய பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தைக்கு எதிரான வழக்கை 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி முதல் முறையாக விசாரிக்க தீர்மானித்த பிரதான நீதவான், சந்தேகத்துக்குரிய இராஜாங்க அமைச்சரை அன்றைய தினம் மீண்டும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேலும் உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த வழக்கின் முதலாவது சாட்சியான பூபாலசிங்கன் சூரியபாலன் மற்றும் இரண்டாவது சாட்சியான மணியரசன் சுலக்ஷன் ஆகியோரை அன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகி வழக்கு தொடர்பான சாட்சிகளை வழங்குமாறு மேலும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல்கைதியான பூபாலசிங்கன் சூரியபாலனின் தலையில் துப்பாக்கியை வைத்து கொலைமிரட்டல் விடுத்ததாக, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் தாக்கல் செய்த வழக்கை, அநுராதபுரம் பிரதான நீதவான் நாலக சஞ்சீவ ஜயசூரிய நேற்று விசாரணைக்கு எடுத்தார்.

நீதிமன்றம் வழங்கிய முன்னைய உத்தரவின் பிரகாரம், சந்தேகத்துக்குரிய இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த இன்று முதல் தடவையாக திறந்த நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். இங்கு, சந்தேகநபரான இராஜாங்க அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டை நீதிமன்றம் வாசித்த பின்னர், சந்தேகநபரான இராஜாங்க அமைச்சர் அனைத்து குற்றச்சாட்டுகளிலும் தான் நிரபராதி என தனது சட்டத்தரணியான ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ் ஊடாக நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப்பிரிவு தனது ஆரம்ப சமர்ப்பணங்களில் அநுராதபுரம் பிரதான நீதவான் நாலக சஞ்சீவ ஜயசூரியவிடம் தெரிவித்தது. 2021 செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாட்களில் சந்தேகநபர் (முன்னாள் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்கஅமைச்சர் லொஹான் எவிந்த ரத்வத்த) அநுராதபுரம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த கைதிகளில் ஒருவரான பூபாலசிங்கன் சூரியபாலனை நோக்கி துப்பாக்கியை காட்டி மிரட்டி, விரும்பினால் சுட்டுக்கொல்ல முடியுமென கிரிமினல் மிரட்டல் விடுத்தமைக்கான போதிய ஆதாரங்கள் இலங்கை குற்றவியல் சட்டத்தின் 183ஆவது பிரிவின்படி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, சட்டமா அதிபரின் பணிப்புரையின் பிரகாரம் இலங்கை குற்றவியல் சட்டத்தின் 486ஆவது பிரிவின் கீழ் சந்தேகநபரான லொஹான் எவிந்த ரத்வத்தவுக்கு எதிராக இந்த நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடமையாற்றிய சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் அன்றைய தினம் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் உட்பட 14 பேர் இந்த வழக்கில் சாட்சிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

## நக்கல் நமசிவாயம்

**ஈஸ்ரர் தாக்குதல் சம்பவ குற்றவாளிகள் தப்பமுடியாதென்று ரணில் சொல்லுறார்... இப்போ தெரியுதா மைத்ரி ஐயா ஏன் ரணிலுக்கு சப்போர்ட் பண்ணத் தயாராகிறார் என்று..?**



# கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் காணி இராணுவத்தினரால் விடுவிப்பு



*மு.தமிழ்ச்செல்வன்*

2009இற்குப் பின்னர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குச் சொந்தமான காணியில் ஒரு ஏக்கர் காணி நேற்று இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி டிப்போ சந்திக்கருகில் இரத்தினபுரம் வீதி பக்கமாக இக் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. காணி விடுவித்தலுக்கான ஆவணத்தை இராணுவ அதிகாரி மாவட்ட அரச அதிபரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், கரைச்சி பிரதேச செயலாளர், இராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தலைமன்னாரில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்களை காணவில்லை

*ஜோசப் நயன்*



தலைமன்னாரிலிருந்து மீன்பிடியில் ஈடுபடுவதற்காக படகு ஒன்றில் சென்ற இரு மீனவர்கள் கரை திரும்பாத நிலையில் தலைமன்னார் மீனவர்கள் குறித்த மீனவர்களை தேடி வருகின்றனர்.

மேலும், குறித்த மீனவர்களை தேடிச் சென்ற படகுகளில் இரு படகுகள் கடல் கொந்தளிப்பு மற்றும் கடும் காற்றின் காரணமாக கச்சத்தீவில் தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (12) மாலை 07.30 மணியளவில் தலைமன்னார் கிராமம் கடற்கரையிலிருந்து வட கடலில் இரு மீனவர்கள் ஒரு படகில் வலிச்சல் மூலம் மீன்பிடிக்க சென்றுள்ளனர்.

ஆனால், அவர்கள் வழமையாக கரை திரும்பும் நேரத்தில் கரை திரும்பாததால் இப் பகுதி மீனவர்கள் கடலில் இவர்களை தேடுவதில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை (13) மாலை வரை அவர்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களைத் தேடிச் சென்ற படகுகளில் இரு படகுகள் காற்று, கடல் கொந்தளிப்பு காரணமாக உடன் கரை திரும்ப முடியாத நிலையில் கச்சத்தீவில் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மீனவர்களை தொடர்ந்தும் தேடி வருகின்றனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023 செப்டெம்பர் 15ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# நிபா வைரஸ் - எச்சரிக்கை தேவை

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து ஒருவழியாக மீண்டெழுந்துவிட்டோம் என்று நிம்மதிப் பெருமூச்சு விடும் வேளையில், அதனால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கங்கள் காரணமாக ஏற்பட்ட துயரத்திலிருந்து மீண்டுகொண்டிருக்கும் நிலையில், "நிபா வைரஸ்'' மீண்டும் அச்சுறுத்தக் கிளம்பியிருக்கிறது.

இந்திய கேரள மாநிலத்தில் இரண்டு உயிர்களை வங்கதேச வகை நிபா வைரஸ் பலிகொண்டிருக்கிறது என்பதால், அதிவேக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம்.

2018 இல் முதல் முதலாக உயிர்க்கொல்லி நிபா வைரஸ் கேரள மாநிலத்தில் தலைதூக்கியது.

சுகாதாரத் துறையின் முன்களப் பணியாளர்கள் உட்பட 17 பேர் அப்போது பரவிய நிபா விஷக் காய்ச்சலால் உயிரிழந்தனர். 2019இலும், 2021இலும் மீண்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிபா விஷக் காய்ச்சலின் அறிகுறிகளும்-பாதிப்புகளும் காணப்பட்டன. என்றாலும், முன்னனுபவம் காரணமாக கேரள மாநிலத்தின் சுகாதாரத் துறை அதை உடனடியாக தடுத்து நிறுத்தி நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தது.

இந்த முறை கோழிக்கோடு அரச மருத்துவமனையில் சாதாரண காய்ச்சல் அடையாளத்துடன் வந்த நோயாளியை ஆரம்பகட்ட பரிசோதனை செய்த மருத்துவர்கள், நிபா குறித்து சந்தேகப்படவில்லை. அதனால், 12 நாட்கள் கட்டுப்படுத்தப்படாமல் அந்த நோயாளியின் உடலில் நிபா வைரஸ் அதிவேகமாக வளர்ந்துவிட்டது. அவரது உயிரையும் குடித்தது. அதே அடையாளத்துடன் இரண்டாவது நோயாளியும் உயிரிழந்தபோதுதான், மருத்துவர்கள் நிபா வைரஸ் குறித்த ஐயப்பாட்டை எழுப்ப முற்பட்டனர்.

விலங்குகளிலிருந்து உருவாகும் நோய்களிலிருந்து மனித இனம் தன்னைக் காத்துக்கொள்வது இனிமேல் கடினம் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சர்வதேச அறிவியல் இதழான "நேச்சர்'', தனது 2021 அறிக்கையில் விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்த்தொற்று நிலையங்களில் (ஹொட்ஸ்பொட்) ஒன்றாக இந்தியாவின் மலைப்பிரதேசங்களைக் குறிப்பிட்டிருக்கிறது. வனப்பகுதிகளும் மனிதர்கள் வாழும் பகுதிகளும் ஒன்றையொன்று நெருங்கும்போது அதாவது, விலங்குகள் குடியிருக்கும் காடுகளை அழித்து மனிதர்கள் குடியேறும்போது விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்த்தொற்றுகளுக்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. "நேச்சர்'' இதழ் இதை குறிப்பிட்டுச் சொல்கிறது.

மனிதர்களின் குடியேற்றத்தாலும், ஆக்கிரமிப்பாலும் வனப்பகுதி குறையும்போது காடுகளில் வாழும் வனவிலங்குகளும், பறவை - பூச்சிகளும் வேறுவழியில்லாமல் மனிதர்கள் வாழும் பகுதிகளில் நுழையவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. வனப்பரப்பு குறைவதனால் பழம் தின்னும் வௌவால் உள்ளிட்ட வைரஸ்களைப் பரப்பும் விலங்குகள், மனிதர்கள் வாழும் பகுதியில் அடைக்கலம் தேடுவது இயல்பு.

குரங்குக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், எலிக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் எனத் தொடங்கிய வைரஸ் நோய்த்தொற்றுகள் எல்லாமே விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு பரவும் நோய்கள். காடுகள் அழிக்கப்படுவதால்தான் ஒன்றன் பின் ஒன்றாக இதுபோன்ற நோய்த்தொற்றுகள் மனிதர்களைத் தாக்குகின்றன. இவற்றுக்கு எதிராக தொடர்ந்து கண்காணிப்பும், அவற்றை எதிர்கொள்ளும் வழிமுறைகளும் மருத்துவத் துறையால் மேற்கொள்ளப்பட்டாலொழிய, அவற்றிலிருந்து நாம் தப்ப முடியாது.

எந்தவொரு காய்ச்சலையும் இனிமேல் நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. நோய்க்கான அறிகுறிகள் தோன்றினால், ஒரு நிமிடம்கூடத் தாமதிக்காமல் பரிசோதனைகளும், சிகிச்சைகளும் மேற்கொள்வதற்கான கட்டமைப்பு வசதி கிராமங்களில் இருந்து பெருநகரங்கள் வரை அனைவருக்கும் உடனடியாகக் கிடைக்க வழிவகை செய்தாக வேண்டும். யாராவது ஒருவருக்கு ஏற்படும் விலங்குகள் மூலம் பரவும் ஏதாவது ஒரு விஷக் காய்ச்சல், கவனிக்கப்படாமல் விடப்பட்டால் அது காற்றைவிட வேகமாக பல்லாயிரம் பேருக்கு பரவக்கூடும் என்கிற ஆபத்தை உணர வேண்டும்.

கேரள மாநிலத்தில் உறுதி செய்யப்பட்டிருக்கும் நிபா வைரஸ் தொற்று குறித்து அச்சம் தேவையில்லை என்றாலும், எச்சரிக்கை மனநிலை இலங்கைக்கு அவசியம். நாட்டில் மருந்துகளுக்கும் மருத்துவர்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதால் கொரோனா நோய்த்தொற்றின்போது நாம் மேற்கொண்ட முகக்கவசம், கைகளை அடிக்கடி கழுவுதல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை வழக்கமாகவே மாற்றிக்கொள்வது நல்லது.அதுமட்டுமல்லாமல், வெளிநாடுகளில் வருவோரை ஆரம்பம் முதல் கண்காணிப்பு வலயத்துள் வைத்திருப்பதும் அவசியமானது.

## இன்றைய நாளில்...

- ★ 1835 – சார்ள்ஸ் டார்வின் பீகில் கப்பலில் காலபாகஸுத் தீவுகளுக்குச் சென்று உயிரினங்களின் படிவளர்ச்சிக் கொள்கை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார்.
- ★ 1869 – கர்னாட்டிக் என்ற பிரித்தானிய நீராவிக் கப்பல் லண்டனில் இருந்து மும்பை செல்லும் வழியில் செங்கடலில் பவளப்பாறையில் மோதி மூழ்கியது. 26 பேர் உயிரிழந்தனர்.
- ★ 1952 – ஐ.நாவின் ஒப்புதலுடன் எரித்திரியா எத்தியோப்பியாவுடன் இணைக்கப்பட்டது.
- ★ 1959 – தூர்தர்ஷன் தொலைக்காட்சி சேவை டில்லியில் ஆரம்பமானது.
- ★ 1959 – நிக்கிட்டா குருசேவ் ஐக்கிய அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்ட முதல் சோவியத் தலைவர் ஆனார்.
- ★ 1968 – சோவியத்தின் சொண்ட் 5 விண்கலம் ஏவப்பட்டது. சந்திரனைச் சுற்றி வந்து பூமியின் காற்று மண்டலத்தினுள் நுழைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- ★ 1981 – தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- ★ 1987 – இந்திய அமைதிப் படைக்கெதிராக திலீபன் நல்லூரில் நீராகாரம் இன்றி உண்ணாநோன்பைத் தொடங்கினார்.
- ★ 2017 – சனிக்கோளை ஆய்வு செய்வதற்காக 1997 இல் ஏவப்பட்ட காசினி-ஐசென் விண்கலம் தன் பணிகளை முடித்துக்கொண்டு அழிந்தது.



# தமிழ் மக்களுக்கு உரிமை வேண்டி தன்னுயிரை ஆகுதி ஆக்கிய திலீபன்

தியாகம் என்றால் திலீபன்; திலீபன் என்றால் தியாகம் என்று கூறும் அளவுக்குத் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் என்றும் நிறைந்து நிற்கும் திலீபனது ''தியாக தீபம்' என்ற காரணப்பெயர் பெருமதிப்புக்குரியது மட்டுமன்றி, போற்றுதற்குரியதொன்று மாகும்.

அதனால் தான் தியாகி திலீபனின் தியாகத்தையும், ஈகத்தையும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் வருடாவருடம் பன்னிரு நாட்கள்வரை தொடர்ச்சியாக நினைவு கூருகின்றனர்.

1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் நாள் தொடங்கி, பன்னிரண்டு நாட்கள் வரை, ஒரு துளி நீர் கூட அருந்தாது உணவு தவிர்ப்புப் போராட்டம் மேற்கொண்டு செப்டெம்பர் 26 ஆம் திகதி வீர சுவர்க்கமடைந்த அந்தத் தியாகச் செம்மலின் நினைவு நாட்களை தமிழினம் வழமை போன்று இன்று செப்டெம்பர் 15 ஆம் நாள்முதல் அனுஷ்டிக்கின்றது.

ஈழத்தமிழர் அடங்கலாக புலம்பெயர் தமிழ் உறவுகளும் திலீபனது 30ஆம் ஆண்டு நினைவு நாட்களாக அமையும் இந்த ஆண்டின் செப்டெம்பர் 15ஆம் நாள் முதல் 26ஆம் நாள் வரையான பன்னிரு நாட்களையும் தியாகி திலீபனின் உயிர்த்தியாகத்தை நினைவு கூர்ந்து அஞ்சலிக்கின்றனர்.

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தனது சாகும் வரையான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வீதியிலே காலை வேளையில் தியாகச் சுடர் திலீபன் ஆரம்பித்தான்.

தமிழீழ விடுதலையை உயிர்மூச்சாகக் கொண்டிருந்த திலீபன், தமிழீழத்தை அங்கீகரிக்கக் கோரி இந்திய அரசிடம் மடிப்பிச்சை கேட்கவுமில்லை. கையேந்தி நின்று இரந்து கேட்கவுமில்லை. திலீபனின் உணவு தவிர்ப்புப் போராட்டம் இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டதாகவே அமைந்திருந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரான பிரபாகரன் 04.08.1987 அன்று சுதுமலையில் நடைபெற்ற கூட்டத்தில் ''எமது போராட்ட வடிவம் மாறலாம். ஆனால், எங்கள் குறிக்கோள் என்றுமே மாறாது'' என்று சூளுரைத்திருந்தார்.

போராட்டத்தின் மற்றொரு வடிவமாக அஹிம்சைப் போராட்டத்தை விடுதலைப் புலிகள் தேர்ந்தெடுத்திருந்தனர். அதற்கமையவே திலீபனின் அஹிம்சைப் போராட்டம் நீர் கூட அருந்தாத உணவு தவிர்ப்புப் போராட்டமாக அமைந்தது.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி ஈழத் தமிழினத்தின் நலன்களைப் பாதுகாப்பதாகக் காட்டிக்கொண்டு இந்திய அரசு, அப்போதைய இலங்கை அரச தலைவரான ஜே.ஆர்.ஜயவர்த்தனவுடன் தமிழினத்தலைவர்களையும் விடுதலைப்புலிகளையும் புறமொதுக்கி வைத்துவிட்டுத் தனது விருப்பப்படி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மேற்கொண்டது. தமிழர்களின் நலன் கருதி இருநாட்டுத் தலைவர்களாலும் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் தமிழர்களுக்குச் சாதகமான அம்சங்கள் எதுவும் இருக்கவில்லை.

**வடக்கு, கிழக்கில் இந்திய அமைதிப்படை**

அந்த ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்திய அமைதிப்படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைதல் என்பதே முக்கியமானதாக வும், மாகாணசபை உருவாக்கப்பட்டு அதன்மூலம் தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது என்ற விடயமும் அடங்கியிருந்தது.

இந்திய அரசு ஒப்பந்தம் கைச்சாத்தாகி குறுகிய கால இடைவெளிக்குள் தமிழினத்திற்கெதிரான போக்கைப் படிப்படியாகக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி சில உறுதிமொழிகளை விடுதலைப் புலிகளுக்கு வழங்கியிருந்தார்.

அந்த உறுதிமொழிகள் எதனையும் ராஜீவ் காந்தி நிறைவேற்றாத காரணத்தினால் விடுதலைப் புலிகள் அவற்றை நிறைவேற்றும்படி கேட்டுக்கொண்டபோது, அதனை அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி நிராகரித்துவிட்டார்.

அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள் என்று வேண்டியே தியாகி திலீபன் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்க வேண்டிய நிலையேற்பட்டது.

விடுதலைப் புலிகள், ஈழத் தமிழ்மக்கள் சார்பிலான கோரிக்கைகளை 13.09.1987 அன்று இந்திய உயர்ஸ்தானிகரான யோகேந்திரநாத் டிக்ஸிற்றின் கைகளில் கிடைக்கக் கூடியவாறு கடிதமூலம் அனுப்பிவைத்து அதற்குப் பதிலளிக்க 24 மணித்தியால அவகாசமும் கொடுத்திருந்தனர்.

ஆனால், 15.09.1987 வரை எதுவிதமான பதில்களும் விடுதலைப் புலிகளுக்கு இந்தியத்தூதுவரிடமிருந்து கிடைக்கவில்லை.

உணவு தவிர்ப்புப் போராட்டமும், மறியல் போராட்டமும் நடத்துவதென தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்களின் கூட்டத்தில் 13.09.1987 அன்று தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைவாகவே அஹிம்சைப் போராட்டமும் ஆரம்பமாகியது. தானே சாகும்வரை உண்ணா நோன்புப் போராட்டத்தில் குதிப்பதாக திலீபன், தலைவரான பிரபாகரனிடம் வேண்டிக் கொண்டார். அதன்படி திலீபனின் தியாகப் பயணம் ஆரம்பமானது.

**திலீபன் முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கைகள்**

இந்திய அரசிடம் 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்தே திலீபனது அஹிம்சைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்;

வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றுப் புதிய நிர்வாகம் பொறுப்பேற்கும் வரை வடக்கு, கிழக்கு நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக வாக்குறுதி அளித்தவாறு இடைக்கால நிர்வாக சபையை நிறுவவேண்டும்;

மீள்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் சிங்களவர்கள் குடியமர்த்தப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும்; அவசரகாலச் சட்டமும் முழுமையாக நீக்கப்பட வேண்டும்; வடக்கு, கிழக்கில் பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் புதிதாகத் திறக்கப்படக் கூடாது என்பவையே அந்த ஐந்து முக்கிய கோரிக்கைகளாகும்.

இந்திய ஆதிக்க அரசு, பசுந்தோலாகப் போர்த்தியிருந்த அமைதிப்படை என்ற போலியான முகத்திரையை கிழித்தெறிந்து, அது அக்கிரம ஆக்கிரமிப்புப் படையாக மாறிவிட்டது என்பதைத் தியாகி திலீபன் தன்னுடைய அஹிம்சைப் போரின் மூலம் இந்திய வல்லரசுக்கு போதித்துக் கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஊரெழு என்ற கிராமத்தில் 1963ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27ஆம் திகதியன்று ஆசிரியரான இராசையா தம்பதியினருக்கு கடைசிப்பிள்ளையாகப் பிறந்த திலீபனது இயற்பெயர் பார்த்தீபன் என்பதாகும்.

தாயை இழந்த திலீபன் தந்தையின் அரவணைப்பிலே வளர்ந்து ஊர்ப்பள்ளியில் கல்வி கற்ற பின்னர் உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரியில் தொடருகின்றான்.

சிறுவயது முதற்கொண்டே படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரனாகத் திகழ்ந்தான் திலீபன். எல்லோரிடமும் அன்பும், பாசமுமாகப் பழகும் குணம் அவனிடம் சிறுவயதிலிருந்தே ஊறியிருந்தது. உயர்தரப்பரீட்சையை முடித்துப் பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருந்தான்.

1979 ஆம் ஆண்டு அப்போதைய அரச தலைவரான ஜே.ஆர்.ஜயவர்தனவின் அரசு, தமிழர் பிரதேசத்தில் தமிழ் இளைஞர்களை வேட்டையாட ஆரம்பித்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் விசேடமாக இயற்றி அந்தச் சட்டத்தின் பலத்துடன் தமிழ் இளைஞர்களைத் தேடி அழிக்கின்ற நடவடிக்கைகளில் இராணுவத்தினர் அந்தக் காலப்பகுதியில் மூர்க்கத்தனமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

குடாநாட்டுக்குள் பல இளைஞர்கள் வீடுகளிலிருந்து பலவந்தமாக இழுத்துவரப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுச் சடலங்களாக வீதியோரங்களில் வீசப்பட்டனர். இலங்கைப் படையினரின் அட்டூழியங்களால் மனவைராக்கியமுற்றான் திலீபன்.

மாணவனாக இருந்தபோது படையினரின் இத்தகைய கொடூரங்கள் திலீபனின் மனதில் ஆழப்பதிந்திருந்தன. தமிழ் மாணவர்கள் மீது சிறிமாவோ அரசு கொண்டு வந்த தரப்படுத்தல் திட்டமும் திலீபனை வாட்டியிருந்தது.

அதற்கும் மேலாக, 1983ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையும், இனக் கலவரமும் அவனது 20 ஆவது வயதில் அவனது இதயத்தில் சிங்களப்படைகள் மீதான வைராக்கியத்தை ஏற்படுத்தி வைத்திருந்தது மட்டுமல்லாமல், கடும் பகை உணர்வையும் ஏற்படுத்தியிருந்தது.

திலீபன் மருத்துவபீடத்துக்குத் தெரிவு செய்யப்படுகின்றான். எதிர்காலத்தில் மருத்துவராகி வசதியான வாழ்க்கைக்குள் சென்றுவிட வேண்டும் என்ற கனலைத் தூக்கியெறிந்துவிட்டு தமிழினத்தின் விடுதலைக்காக புலிகள் அமைப்பில் இணைந்து கொள்கின்றான். ஆயுதப் போராளியாக மாறிய திலீபன் தன்னுடைய திறமையாலும், பேச்சாற்றலாலும் படிப்படியாக உயருகின்றான்.

இடைக்காடுப்பகுதியில் இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதலொன்றின்போது திலீபன் படுகாயமடைந்து ஒரு சில மாதங்கள் வரையில் சிகிச்சைபெற்ற பின்னர் அரசியல் பணியைப் பொறுப்பேற்று யாழ்.மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளராகின்றான். பேச்சுவன்மை கொண்ட திலீபன் மக்களின் மனங்களைக் கவர்ந்த போராளியாகின்றான்.

நான் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுகிறேன் என்று தலைவரிடம் கேட்டுக் கொண்டு அனுமதி பெற்ற பின்னர், செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி திலீபன் காலை ஒன்பது மணியளவில் நல்லூர் வீதியில் திரண்டிருந்த மாணவ மாணவியர்கள், பொதுமக்கள் மத்தியில் புன்சிரிப்பை உதிர்த்துக் கொண்டு அவர்களிடமிருந்து கையசைத்து விடைபெற்று உண்ணாவிரத மேடையை நோக்கி நடந்து சென்று மேடையில் அமருகின்றான்.

அமருவதற்கு முன் எதிர்பாராத விதமாக வயதான தாயொருவர் கண்களில் நீர்மல்க திலீபனை மறித்துத் தன்கையில் வைத்திருந்த விபூதியைத் தனது கைகளால் எடுத்து திலீபனது நெற்றியில் பூசுகின்றார். அந்தத் தாயின் செய்கையால் நெகிழ்ந்து போன திலீபன் 9.45 மணியளவில் தனது அறப் போராட்டத்தை ஆரம்பிக்கின்றான்.

கவிஞர் காசி ஆனந்தன், பா.நடேசன், ராஜன், அன்ரன் மாஸ்டர், சொர்ணம் உட்பட்ட பல முக்கிய போராளிகள் அமர்ந்திருக்க கவிஞர்காசி ஆனந்தன் திலீபனின் உண்ணாவிரதம் ஏன் ஆரம்பிக்கப்படுகின்றது என்பதைப்பற்றி விளக்கமளிக்கின்றார்.

ஆரம்பித்த நாளிலிருந்து இறுதிநாள் வரை நல்லூர் வீதியில் குடாநாடுகளிலிருந்து மாணவ, மாணவியர்கள் பொதுமக்கள் திரள்திரளாக வந்து கலந்து கொண்டார்கள். திலீபனின் தியாகப் பயணத்தை, அறப் போராட்டத்தை எடுத்துரைத்தார்கள்; கவிதை மழை பொழிந்தார்கள்.

**திலீபனது அஹிம்சைப் போராட்டத்தை எள்ளி நகையாடியது காந்தி தேசம்**

அஹிம்சைப் போராட்டத்திற்கே ஆணிவேராகத் திகழ்ந்த அண்ணல் காந்தியடிகள் தன்னுடைய உணவு தவிர்ப்புப் போராட்டங்களை நீராகாரம் அருந்தியே நடத்தியிருந்தார்.

ஐரிஸ் போராட்ட வீரர் பொபி சான்ட்ஷ் சிறைக்குள் நீராகாரம் அருந்தித்தான் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து உயிர்துறந்தார்.

உணவு தவிர்ப்பு அறவழிப் போராட்டத்தை தாங்களே உலகுக்கு அளித்ததாகப் பீற்றிக் கொள்ளும் இந்திய தேசம், திலீபனது அறப்போராட்டத்தைக் கடைசிவரை கண்டுகொள்ளவேயில்லை. காந்தி தேசத்தின் புகழையும், பெருமையையும் தினமும் பேசி வருகின்றவர்கள், திலீபனின் போராட்டம் தவறானது என்று நிறுவ முயன்றனர்.

தொடர்ந்து பன்னிருநாட்கள் வரையில் அறப்போர் நிகழும் இடமாக நல்லூர் வீதி மாறியது. தன் தேகத்தை ஆகுதியாக்கி எரிந்து கொண்டிருந்தான் திலீபன். அறப்போர் மேடையில் புத்தகங்கள், பத்திரிகைகள் வாசிப்பதற்கு திலீபன் தவறவில்லை.

அவ்வேளை இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி, திலீபனின் அறப் போராட்டத்துக்கு முக்கியத்துவம் வழங்க முன்வரவில்லை. திலீபனோ தன்னை உருக்கி மற்றவர்கட்கு ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்தியாக ஒவ்வொரு கணத்திலும் உருகிக் கொண்டிருந்தான்.

ஊரெழு மைந்தனின் நிலையை நினைத்துக் கண்ணீர் விட்டனர் கூடியிருந்த மக்கள். திலீபா, எங்களை விட்டுப் போகாதே; இந்திய தேசமே, எங்களுக்காக உயிர்க்கொடை செய்ய முன்நிற்கும் எங்கள் பிள்ளையைக் காப்பாற்று; என்றெல்லாம் கூறிக் கண்ணீர் உகுத்தனர். கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் வேண்டுகோள்களை இந்திய அரசு தூக்கியெறிந்தது.

''யாழ்.கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கின்றதோ, அன்றுதான் சுதந்திர தமிழீழத்தின் ஆரம்பம். மக்கள் புரட்சி வெடிக்கட்டும். சுதந்திரத் தமிழீழம் மலரட்டும்; இந்த வெற்றி நான் என் உயிருக்கும் மேலாக நேசிக்கும் என் மக்களுக்கு கிடைக்கட்டும்.

எமது சந்ததி வாழ ஒரு நாடு தேவை. இல்லாவிட்டால் நாளை எங்களைப் போன்றுதான் எமது எதிர்காலச் சந்ததியும் துன்பப்படும்,'' - எனத் தனது இறுதி உரையில் தியாகி திலீபன் கூறுகிறான்.

''என்னால் பேசமுடியவில்லை. எனது மனம் மகிழ்ச்சியில் மிதக்கின்றது'' -என்று பெருமிதப்படுகிறான் அந்தத் தியாகச் செம்மல். 265 மணிநேரமாக தான் தமிழ் மக்களுக்காக இயற்றிய தனது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்து 26.9.1987 அன்று காலை 10.58 மணிக்கு வீரசுவர்க்கம் எய்துகிறான் தியாகச்சுடர் திலீபன். "ஓ மரணித்த வீரனே, உன் ஆயுதங்களை எனக்குத் தா, உன் சீருடைகளை எனக்குத்தா" என்ற பாடலோடு திலீபன் வரலாறாகினான்.

தியாகி திலீபனால் அன்று ஆரம்பிக்கப்பட்ட அஹிம்சைப் போராட்டம் பல ஆழமான விடயங்களை இன்றைய காலகட்டத்தில் தமிழினத்துக்கு நினைவுறுத்தி நிற்கிறது. ஒப்பற்ற வீரனின் கனவுகளைச் சுமந்து நிற்கின்ற ஒவ்வொரு தமிழர்களும் அந்தத் தியாகச் செம்மல் திலீபனை பன்னிருநாள் வரையிலும் நினைவு கூர்ந்து அஞ்சலித்து நிற்போம். அது ஒவ்வொருவரினதும் வரலாற்றுக் கடமையாகும்.

நன்றி - இணையம்

# கே.எஸ்.சிவகுமாரன் நினைவுதினம் இன்று



ஈழத்து எழுத்தாளரும், கலை, இலக்கியத் திறனாய்வாளருமான கே. எஸ். சிவகுமாரன், வானொலி ஒலிபரப்பாளரும் ஆவார்.அவரின் முதலாவது ஆண்டு நினைவுதினம் இன்றாகும்.

மட்டக்களப்பில் புளியந்தீவில் சிங்களவாடி என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பெற்றோர்கள் திருகோணமலையையும், மட்டக்களப்பையும் பூர்வீகமாகக் கொண்டவர்கள். இலங்கையிலும், பின்னர் ஓமானில் 1998 முதல் 2002ஆம் ஆண்டு வரை ஆங்கில இலக்கிய ஆசிரியராகப் பணியாற்றினார். மாலைதீவுகளிலும் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

இலக்கியம், நாடகம், திரைப்படம், ஊடகங்கள், அறிவியல், செய்தித் திறனாய்வுகள், அரசியல் திறனாய்வுகள், இசை, நடனம், ஓவியம், மொழிபெயர்ப்பு, சிறுகதை, கவிதை போன்ற பல துறைகளிலும் எழுதி ஒலி, ஒளிபரப்பி வந்திருக்கிறார். இலங்கை வானொலியில் தமிழிலும், ஆங்கிலத்திலும் நிகழ்ச்சிகளை வழங்கியிருக்கிறார். 30 தமிழ் நூல்களையும், 2 ஆங்கில நூல்களையும், இரண்டு ஆங்கில மொழிக் கலைக்களஞ்சியங்களையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

ஆங்கிலம், மற்றும் சிங்கள மொழிகளிலும் எழுதுகிறார். ரேவதி என்ற புனைப்பெயரிலும் திரைப்படம் சம்பந்தமான கட்டுரைகளை ஆங்கிலத்தில் இவர் எழுதி வந்திருக்கிறார். 1959 இல் நாவலாசிரியர் வரிசையில் வரதராசனாரின் இடம் என்பதே இவர் எழுதிய முதலாவது இலக்கியத் திறனாய்வுக் கட்டுரையாகும். ஜீவநதி சஞ்சிகை கே. எஸ். சிவகுமாரனுடைய பவள விழாச் சிறப்பிதழாக ஓர் இதழை வெளியிட்டுள்ளது.

**சென்னை பல்கலைக் கழகத்தில் பாராட்டு**

கே. எஸ். சிவகுமாரனின் சேவையைப் பாராட்டி சென்னைப் பல்கலைக்கழக இதழியல், தொடர்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் கோ. இரவீந்திரன் கௌரவித்தார்.

இலங்கை வானொலி தமிழ் தேசிய, வர்த்தக ஒலிபரப்புகளிலும், ஆங்கில சேவையிலும் 1960களில் பணியாற்றிய மூத்த ஒலிபரப்பாளரான கே. எஸ். சிவகுமாரனுக்கு சென்னையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

சென்னை பல்கலைக்கழக இதழியல், தொடர்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் கோ. இரவீந்திரன் தலைமையில் பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இலங்கை வானொலி தொடர்பான கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. பிரபல தொழிலதிபரும் சென்னை பொதிகை தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான வி. கே. டி. பாலன் மற்றும் இலங்கை வானொலி மேனாள் மூத்த ஒலிபரப்பாளர் அப்துல் ஜப்பார், ஈழத்து எழுத்தாளரும் ஒலிபரப்பாளருமான தம்பிஐயா தேவதாஸ் ஆகியோர் முன்னிலையில் துறைத்தலைவர் கே. எஸ். சிவகுமாரனுக்கு சால்வை அணிவித்து நினைவுக் கேடயம் ஒன்றையும் வழங்கினார்.

**வாழ்நாள் சாதனையாளர்**

யாழ்ப்பாணத்தில் 2020 டிசெம்பர்-2021 ஜனவரி காலப்பகுதியில் நடைபெற்ற ஆறாவது யாழ்ப்பாணம் சர்வதேச திரைப்பட விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

# புகையிரதம் தடம்புரள்வு: போக்குவரத்துக்குத் தடை





தலவாக்கலை நிருபர்

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த புகையிரதம் வட்டகொட புகையிரத நிலையத்துக்கருகாமையில் நேற்று முன்தினம் (13) பிற்பகல் 2.45 மணியளவில் தடம்புரண்டது.

இதனால் மலையகப் புகையிரதப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி புகையிரத கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

உடரட்ட மெனிக்கே புகையிரதத்தின் எஞ்சின் பகுதியே தடம் புரண்டதாக ரயில்வே கட்டுப்பாட்டுப்பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மலையகப் பிரதேசங்களுக்கு புகையிரதத்தில் பயணிக்கும் பயணிகள் கடும் சிரமங்களையும் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

# இரு வாகனங்களின் மேல் பாரிய மரம் விழுந்து நால்வர் காயம்





க.கிஷாந்தன்

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அவிசாவளை, கிரிவன்தல பகுதியில் நேற்றுமுன் தினம் (13) இரவு 7.30 மணியளவில் பாரிய மரம் ஒன்று முறிந்து பிரதான வீதியில் விழுந்துள்ளமையினால் அவ் வீதியூடான போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டது மாத்திரமன்றி, முச்சக்கரவண்டிக்கும் ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளுக்கும் மேல் விழுந்ததால் அவற்றில் பயணித்தவர்களும் காயமடைந்தனர்.

இதனையடுத்து, முச்சக்கரவண்டியில் பயணித்த மூவரும் ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவருமாக அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மரத்தை அகற்றும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், அவ்வீதியூடான போக்குவரத்து ஒரு வழிப் போக்குவரத்தாக பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு



''சிவில் உரிமை மற்றும் வாக்காளர் கல்வி'' என்ற தொனிப்பொருளில் பதுளை ஊவாசக்தி நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு பதுளை ரிவர் சைட் ஹோட்டலில் ஊவா சக்தி நிறுவனத்தின் தலைவர் நடேசன் சுரேஷின் தலைமையில் கடந்த (09) சனிக்கிழமை இடம்பெற்றது.

இவ்விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் மற்றும் பதுளை உதவித் தேர்தல் ஆணையாளர் காண்டீபன், அரச உயரதிகாரிகள், சிவில் அமைப்புகளைச் சார்ந்தவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com





மடவளை எமரல் மகளிர் கல்லூரியின் 60 நாள் ஆங்கில மொழி கல்வியையும் குடும்ப நல வாழ்வியல் கல்வியையும் நிறைவு செய்த மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மடவளை நொடா ரிஜன்சி மண்டபத்தில் எமரல் மகளிர் கல்லூரியின் பணிப்பாளர் ஏ.எம்.எம். சுல்பிகார் அலி தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் முன்னாள் தலைவர் சஹீட் எம்.ரிஸ்மி, சிறப்பு வளவாளராக அஷ்-ஷெய்க் ஏ.எல்.அலியார் (மதனி), கௌரவ அதிதியாக அல்-ஹுதா சர்வதேச பாடசாலையின் அதிபர் எச்.எச்.எம். அஸ்வர் ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ் வழங்கி வைத்ததுடன் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

**படங்கள்:** *இக்பால் அலி*

# வழிகாட்டல் செயலமர்வு

எம்.எம்.எம். ரம்ஸீன்

"வெற்றியை நோக்கி" எனும் கருப்பொருளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மஜ்லிஸ் இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான ஆலோசனை, வழிகாட்டல் கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்துள்ளது. இக்கருத்தரங்கு நாளை (16) காலை 8.000 மணி முதல் 3.00 மணிவரை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடத்தில் ஈ.ஓ.ஈ .பெரேரா அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைப் பதிவு செய்யும் நடைமுறைகள், பல்கலைக்கழக அனுமதிக்கான பாடநெறிகளைத் தெரிவு செய்தல், கல்விசார் கற்கைநெறிகள், தொழில்சார் கற்கைநெறிகள் தொடர்பான வழிகாட்டல்களும் வழங்கப்படவுள்ளன.



**உக்குவளை பிரதேச செயலகமும் கலாசாரப் பிரிவும் இணைந்து சாஹித்திய விழாவொன்றை உக்குவளை பிரதேச சபை கேட்போர் அரங்கில் நடத்தின. இதன்போது உக்குவளை செயலாளர் திருமதி சேரசிங்க, கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் திருமதி தம்மிக்கா உட்பட பிரமுகர்கள், மும்மதத் தலைவர்கள், கலைஞர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டதுடன் கலாசார நடன நிகழ்ச்சிகளும் இதன்போது இடம்பெற்றன.**

**படங்கள்:** *உக்குவளை நிருபர்*

# முச்சக்கரவண்டிகளின் பதிவு அவசியம்; இல்லாவிட்டால் சங்கப் பதிவை நீக்குங்கள்

## அமைச்சர் டக்ளஸ் பணிப்புரை



யாழ்ப்பாண மாவட்ட முச்சக்கரவண்டிச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்டு அரச நிறுவனங்களான பிரதேச சபை மற்றும் மாநகர சபைகளில் பதிவுசெய்யப்படாத முச்சக்கரவண்டிகளை சங்கத்திலிருந்து நீக்குமாறு கடற்றொழில் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (12) யாழ்ப்பாண மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் முச்சக்கரவண்டிகள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்ற நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 2ஆயிரம் முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபடுவதுடன் அநேகமான முச்சக்கர வண்டிகள் உரிய பதிவுகளை மேற்கொள்ளவில்லை என யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர், யாழ்ப்பாண மாவட்ட முச்சக்கரவண்டிச் சங்கத்திலிருந்து குறித்த கூட்டத்துக்கு வருகை தந்தார்களா என கேள்வி எழுப்பிய நிலையில் அதன் தலைவர், எமது சங்கத்தில் ஆயிரத்து 997 முச்சக்கரவண்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், சுமார் ஆயிரத்து 300 முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் பொருத்தப்பட்டுள்ளது - என்று கூறினார்.

இதன்போது அமைச்சர், மீதமுள்ள முச்சக்கரவண்டிகளுக்கு ஏன் மீற்றர் பொருத்தவில்லை. அவை தமது பிரதேசத்திலுள்ள அரச நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதா? என கேள்வி எழுப்பினார்.

இதன்போது தலைவர், சுன்னாகம் மற்றும் தெல்லிப்பழை ஆகிய பிரதேசங்களில் எமது சங்கத்தில் பதிவுசெய்யப்பட்டு சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் பிரதேச சபையில் பதிவுசெய்யப்பட்டதாகவும் ஏனைய இடங்கள் தொடர்பில் ஆராய வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், சங்கத்தில் பதிவுசெய்யப்பட்டு சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் கட்டாயம் பிரதேசத்திலுள்ள அரச நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவுசெய்யப்படாத முச்சக்கரவண்டிகளுக்கு இரண்டு மாத கால அவகாசம் வழங்கி உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள். இல்லாவிட்டால் சங்கத்திலிருந்து அவர்களது பெயரை நீக்கி விடுங்கள்'' – என்றார்.

குறித்த கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவ பாலசுந்தரன், ஜனாதிபதி செயலகத்தின் வடமாகாண மேலதிக செயலாளர் இளங்கோவன், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகன் யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புப் படைகளின் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுப்பு




வவுனியா நிருபர்

வவுனியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள் வைத்தியசாலை முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

நேற்று முன்தினம் (13) பிற்பகல் 12.00 மணியளவில் குறித்த ஆர்ப்பாட்டம் வவுனியா பொது வைத்தியசாலை முன்பாக இடம்பெற்றிருந்தது.

நாடு முழுவதும் அமைதி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்திருந்தது. அதற்கமைவாகவே குறித்த ஆர்ப்பாட்டம் வவுனியாவிலும் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வைத்தியர்கள் ''மருந்துகள் இல்லை. சுகாதார கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது, தனியார் மருத்துவத்தை வளர்க்க இலவச மருத்துவத்தை அழிக்காதே, வைத்தியர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்து, வைத்தியர்களை வெளியேற நிர்ப்பந்தித்து இலவச வைத்திய சேவையை முடக்கும் சதியை முறியடிப்போம், திறமையற்ற சுகாதார நிர்வாகிகளே வைத்தியர்களின் தொழில் உரிமையில் கை வைக்காதே'' என எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

அத்துடன், இலங்கையிலிருந்து பல வைத்தியர்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாது மருந்துகள் பற்றாக்குறை காணப்படுகின்றது. வைத்தியர்களின் வெளியேற்றத்தால் எமது சுகாதாரத் துறை மேலும் பலவீனம் அடையும். எமது கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தியும் எமக்குத் தீர்வு கிடைக்காமையால் ஆர்ப்பாட்டத்தை செய்துள்ளோம். இதற்கும் தீர்வு இல்லையெனில் வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வைத்தியர்கள் தெரிவித்தனர். இதில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வவுனியா பிரதிநிதிகள், வைத்தியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் கைது

பு.கஜிந்தன்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 19 பேர் நேற்று முன்தினம் (13) இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் குறித்த 19 பேரும் இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது 03 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று (14) நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள குறித்த மீனவர்கள், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| | செவ்வாய்க்கிழமை 2023.09.12 | புதன்கிழமை 2023.09.13 |
|---|---|---|
| மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் | 5235 | 5236 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 26,067,304.00 | ரூ. 26,115,384.00 |
| ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் | Z 1 5 4 6 1 7 | A 0 1 7 9 5 4 |
| கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் / திகதி | 3477 / 2023.09.12 | 3478 / 2023.09.13 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | Rs. 60,000,000.00 | Rs. 60,191,605.60 |
| ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் / விசேட எழுத்து | V 24 33 38 58 V | Q 17 37 51 70 Q |
| இலட்சாதிபதி பபள் சான்ஸ் வெற்றி இலக்கம் | 73881 | 61176 |
| ஒஸி லக்கி 7 — திகதி / சீட்டிழுப்பு இலக்கம் | 12.09.2023 / 0061 | 13.09.2023 / 0062 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 7 1 5 6 1 3 | 8 3 8 1 5 7 |
| L7 இலக்கம் | 4 0 | 3 7 |
| அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு | ரூ. 10,871,119.28 | ரூ. 10,871,802.56 |
| தன நிதானய — தேதி / சீட்டிழுப்பு இலக்கம் | 2023/09/12 / 1265 | 2023/09/13 / 1266 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 109,546,752.80 | ரூ. 109,792,409.60 |
| ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் / விஷேட ஆங்கில எழுத்து | E 03 04 16 48 E | I 16 35 56 67 I |
| Double Chance இலக்கம் | 24373 | 40357 |
| ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு திகதி / இலக்கம் | 2023-09-12 / 544 | 2023-09-13 / 545 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 3,451,453.60 | ரூ. 3,575,913.20 |
| வெற்றி இலக்கினம் / வெற்றி இலக்கங்கள் / விசேட இலக்கினம் | மேஷம் 20 36 60 62 மேஷம் | தனுசு 12 15 24 38 தனுசு |
| Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் | 1583 12/09/2023 | 1584 13/09/2023 |
| Double Chance | 10043 | 32811 |
| அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 407,482,412.00 | ரூ. 407,618,652.00 |
| ஆங்கில எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள் | T 01 04 11 41 68 | O 26 12 17 24 62 |
| அடுத்த பவர் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 | ரூ. 10,000,000.00 |
| அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 | ரூ. 10,000,000.00 |

# ஓய்விலிருந்து மீள வந்து ருத்ரதாண்டவமாடிய பென் ஸ்டோக்ஸ்

## இங்கிலாந்து அணிக்கு அபார வெற்றி



இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 04 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் முதலில் விளையாடியது. இதில் இரு அணிகளும் தலா இரு போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை சமன் செய்தன. இதனையடுத்து, 04 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் நடந்து வருகிறது. இதில் முதல் ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து 08 விக்கெட்டுகள் வித்தியாசத்திலும் 2ஆவது போட்டியில் இங்கிலாந்து 79 ரன்கள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றது.

மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் லண்டனில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியில் பென் ஸ்டோக்ஸ் மட்டும் நங்கூரம் போன்று நின்று அதிரடியாக விளையாடி ரன்களை குவித்தார். அதிரடியாக ஆடிய பென் ஸ்டோக்ஸ் 76 பந்துகளில் சதம் அடித்தார். இது அவரது 4ஆவது ஒருநாள் போட்டி சதம் ஆகும். அதன் பிறகு 48 பந்துகளில் 82 ரன்கடிள குவித்து ஆட்டமிழந்தார். அவர் 124 பந்துகளில் 15 பவுண்டரி மற்றும் 09 சிக்ஸர்கள் உட்பட மொத்தமாக 182 ரன்களை குவித்தார்.

இதன் மூலமாக ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு போட்டியில் அதிகபட்ச ரன் எடுத்த இங்கிலாந்து வீரர் என்ற சாதனையை பென் ஸ்டோக்ஸ் பெற்றார். 2ஆவது இடத்தில் ஜேசன் ரோய் 180 ரன்களுடன் உள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் திகதி ஸ்டோக்ஸ் சர்வதேச போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். அதன் பிறகு கடந்த ஓகஸ்ட் 16 ஆம் திகதி தனது ஓய்வு முடிவை திரும்பப் பெற்றார். இந்நிலையில், தற்போது செப்டெம்பர் 13, 2023 ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிக ரன்கள் குவித்த இங்கிலாந்து வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். இறுதியாக இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 368 ரன்கள் எடுத்தது. பதிலுக்கு ஆடிய நியூசிலாந்து அணி 187 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழக்க இங்கிலாந்து அணி 181 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

# உலகக்கிண்ணத்துக்கு முன் முதலிடத்துக்கு மும்முனைப் போட்டி



ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த மாத ஆரம்பத்தில் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில் உலகக்கிண்ண தொடருக்கு முன்பாக நம்பர் வன் இடத்தை பிடிக்க 03 அணிகள் வரிந்து கட்டுகின்றன.

தற்போது ஒரு நாள் போட்டி அணிகளின் தரவரிசையில் டாப்-5 இடங்களில் முறையே அவுஸ்திரேலியா (121 புள்ளி), பாகிஸ்தான் (118புள்ளி), இந்தியா (115புள்ளி), நியூசிலாந்து (106புள்ளி), இங்கிலாந்து (99புள்ளி) ஆகிய அணிகள் உள்ளன. இதில் முன்னாள் உலக சம்பியன்களான அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், இந்தியா இடையே தான் நம்பர் வன் இடத்துக்கு நேரடி போட்டி நிலவுகிறது.

அவுஸ்திரேலியாவை பொறுத்தவரை தென்ஆபிரிக்காவுக்கு எதிரான எஞ்சிய 03 ஒரு நாள் போட்டிகளில் 2இல் தோற்றால் நம்பர் வன் இடத்தை இழந்துவிடும். அதன் பிறகு அந்த அணி உலகக்கிண்ணத்துக்கு முன்பாக இந்தியாவுக்கு எதிராக 03 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. இந்த தொடரை முழுமையாக வென்றால் மறுபடியும் முதலிடத்துக்கு முன்னேற வாய்ப்பு கிடைக்கும்.

தற்போது ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் விளையாடிவரும் இந்திய அணிக்கு அதில் தொடர்ந்து சாதகமான முடிவுகள் கிடைக்க வேண்டும். மேலும் சொந்த மண்ணில் ஆஸி. க்கு எதிராக மோதும் 03 ஒருநாள் போட்டிகளிலும் வெற்றி வாகை சூட வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால் இந்தியா நம்பர் வன் அணியாக பயணிக்க முடியும்.

பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றால் அதையும் சேர்த்து இன்னும் 02 ஆட்டங்களில் விளையாட வேண்டியிருக்கும். இரண்டிலும் வெற்றி பெற்றால் அந்த அணி முதலிடத்தை அடையும். ஆனால் அந்த இடத்தை தக்கவைப்பது கடினம். ஏனெனில், அதன் பிறகு பாகிஸ்தானுக்கு எந்த தொடரும் இல்லை.

நேரடியாக உலகக் கோப்பை போட்டியில் தான் கால்பதிக்கிறது. ஒருவேளை ஆசிய கோப்பையை வென்று, அதன் பிறகு இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் சில புள்ளிகளை இழக்கும் நிலை ஏற்பட்டால் பாகிஸ்தானுக்கு அதிர்ஷ்டம் அடிக்கலாம்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



அட்டாளைச்சேனை அல்-நாஜா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை கோணாவத்தை அல்-நாஜா கடற்கரை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற U - 23 வெற்றிக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை அல்-நஜா விளையாட்டுக் கழகத்தினை வீழ்த்தி அட்டாளைச்சேனை பைனா விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது. படம்: றியாஸ் இஸ்மாயில்

# நெய்மருக்கு சடங்குகள் செய்த பெரு நாட்டு மத பயிற்சியாளர்கள்



2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பீபா உலகக்கிண்ண தொடருக்கான தகுதிச்சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பிரேஸில் மற்றும் பெரு அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் பிரேஸில் அணி 1-0 என்ற கோல் கணக்கில் பெருவை வீழ்த்தி வெற்றி பெற்றது. பிரேஸில் வீரர் மார்கினோஸ் வெற்றிக்குரிய கோலை அடித்தார்.

இந்த ஆட்டத்துக்கு முன்னதாக பிரேஸில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் கோல் அடிக்கக்கூடாது என பெரு நாட்டில் உள்ள மத பயிற்சியாளர்கள் சடங்குகள் செய்த விநோத சம்பவம் அரங்கேறியுள்ளது. பெரு மத பயிற்சியாளர்கள் தங்கள் நாட்டின் வெற்றிக்காக ஆசீர்வாதங்களைக் கோரி, சடங்குகள் செய்து பிரார்த்தனை செய்தனர்.

இதில் பிரேஸில் நட்சத்திர வீரர் நெய்மர் ஆட்டத்தை மாற்றும் திறமை கொண்டவர் என்பதால் அவர் கோல் அடிப்பதைத் தடுக்க தனித்துவமான சடங்குகளைச் செய்தனர். நெய்மர் படத்தின் மீது பழுப்பு நிற துணியை போர்த்தி, அவரது இடது காலை கட்டி, வலது காலின் மேல் ஒரு வாளை வைத்து வழிபாடு செய்தனர். எனினும், பெருவுக்கு எதிரான இந்த ஆட்டத்தில் நெய்மர் கோல் அடிக்கவில்லை என்றாலும் பிரேஸில் வெற்றி பெற்றுள்ளது.

# குருந்தூர்மலை வழக்கில் கஜேந்திரன், வினோ பிணையில் விடுதலை

## ஜனவரி 1 1இற்கு வழக்கு ஒத்திவைப்பு

விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு - குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதாக கல்கமுவ சந்தபோதி தேரர் உள்ளிட்ட பௌத்த துறவிகளால் தொடரப்பட்ட வழக்கில், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் தலா ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், குறித்த வழக்கு மேலதிக விசாரணைக்காக அடுத்த வருடம் ஜனவரி 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கானது முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று(14) விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்தவழக்கில் சந்தேகநபர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பிணைவழங்கப் பட்டதுடன், வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் கடந்த 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதியன்று, முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி, கபோக் கல்லினாலான புத்தர் சிலை ஒன்றினை நிர்மாணிப்பதற்கும் அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையின் கலசத்துக்குரிய விசேட பூசைவழிபாடுளை மேற்கொள்வதற்குமான முயற்சியில் பௌத்தபிக்குகள் மற்றும் பௌத்தாலோக நற்பணி மன்றம், தென்னிலங்கையைச் சார்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறி மேற்கொள்ள இந்த முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் ஜனநாயக ரீதியிலான போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இவ்ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் மற்றும் சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

அந்தவகையில் மக்களாலும் மக்கள் பிரதிநிதிகளாலும் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை மீறி அன்றைய தினம் முன்னெடுக்கப்படவிருந்த நிகழ்வுகள் அனைத்தும் ஏற்பாட்டாளர்களால் கைவிடப்பட்டிருந்தன.

இந்நிலையில் குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளை தடுக்க முற்பட்டதாகத் தெரிவித்து, ஆலய நிர்வாகத்தினரோடும் பொதுமக்களோடும் மக்கள் பிரதிநிதிகளாக இணைந்து ஜனநாயகவழி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோருக்கு எதிராக மணலாறு சப்புமல்தென்ன ஆராண்ய விகாராதிபதி கல்கமுவ சந்தபோதி தேரர் உள்ளிட்ட ஏழு தேரர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், தேரர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை விசாரணைக்கு வருமாறு முல்லைத்தீவு பொலிஸார் அழைப்பாணை விடுத்திருந்தனர். பொலிஸாரால் விடுக்கப்பட்ட அழைப்பாணைக்கு அமைவாக கடந்த 2022ஆம் ஆண்டு செப்டெம்பர் 02ஆம் திகதியன்று முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்று தமது வாக்குமூலங்களையும் வழங்கியிருந்தனர். இவ்வாறு வாக்குமூலங்களைப் பெற்றதைத் தொடர்ந்து, பொலிஸார் இந்த விவகாரம் தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கொன்றினைத் தாக்கல் செய்தனர்.

அந்தவகையில் பௌத்த துறவிகளுக்கும் அவர்களுடன் வழிபாடுகளுக்காக வந்த குழுவினருக்கும் அச்சுறுத்தல் விடுத்தமை, அவமானம் ஏற்படுத்தும் வகையில் நடந்தமை போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து B/688/22 என்னும் வழக்கிலக்கத்தில் தொடரப்பட்ட வழக்கின் விசாரணைகள், கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதியன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில், நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் விசாரணையின்போது குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளதும் பொலிஸாரினதும் வாதங்களைச் செவிமடுத்த நீதிபதி, குறித்த தினத்தில் சந்தேகநபர்களாக நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், ஜூட் நிக்சன் ஆகியோரை தலா ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் விடுவித்து உத்தரவிட்டிருந்தார்.

அதேவேளை கடந்த 11.10.2022, 02.03.2023, 08.06.2023 ஆகிய திகதிகளில் நீதிமன்றில் இடம்பெற்ற இந்த விடயம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளின்போது, இந்த வழக்கில் சந்தேக நபர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் வினோநோகராதலிங்கம் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டுமென பொலிஸாருக்கு நீதிபதியால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

நீதிபதியினால் இவ்வாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையிலும், பொலிஸார் குறித்த வழக்குடன் தொடர்புடைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய முறையில் அறிவித்தல் வழங்காதமையினால், அவர்கள் குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்ற திகதிகளில் நீதிமன்றுக்கு முன்னிலையாக முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான சூழலில் இம்முறை உரியமுறை யில் பொலிஸாரால் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நீதிமன்ற அழைப்பாணை வழங்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் நேற்று(14) இந்த வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேகநபர் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், வினோநோகராதலிங்கம், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன், சமூக செயற்பாட்டாளர் ஜூட் நிக்சன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்த நிலையில், குறித்த வழக்கு விசாரணைகள் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபர்களாக இந்த வழக்கில் முதல் தடவை மன்றில் முன்னிலையாகியிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன் மற்றும் வினோநோகராதலிங்கம் ஆகியோருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டதுடன், மேலதிக விசாரணை களுக்காக வழக்கு அடுத்தவருடம் ஜனவரி 11ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மதுபானசாலையை அகற்றக்கோரி உடுப்பிட்டியில் மக்கள் போராட்டம்



பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி சந்தியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலையை அகற்றுமாறுகோரி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.உடுப்பிட்டி சந்தியில் நேற்று காலை இந்த போராட்டம் அப்பகுதி மக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தது.

மதுபானசாலை அமைந்துள்ள குறித்த பகுதியில் பாடசாலைகள், ஆலயம் என்பன இருப்பதனால் இந்த மதுபானசாலை அகற்றப்பட வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.அத்தோடு, சில தினங்களுக்குள் மதுபானசாலை அகற்றப்படாவிட்டால் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தெரிவித்தனர்.

போராட்டம் தொடர்பான மகஜர் வடக்கு மாகாண ஆளுநர், அரசாங்க அதிபர் உள்ளிட் டவர்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (14.09.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 203.1563 | 214.1087 |
| கனேடியன் டொலர் | 233.4376 | 245.1001 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 43.3613 | 45.9213 |
| யூரோ | 340.1677 | 356.1193 |
| ஜப்பான் யென் | 2.1545 | 2.2532 |
| சிங்கப்பூர் டொலர் | 232.7119 | 243.9960 |
| ஸ்ரேலிங் பவுன் | 396.3314 | 413.5047 |
| சுவிஸ் பிராங்க் | 353.5621 | 372.5588 |
| ஐ.அ. டொலர் | 318.0857 | 329.5704 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 857.8116 |
| குவைட் | குவைட் தினார் | 1,047.9545 |
| ஓமான் | ஓமான் றியால் | 839.9751 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.6817 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.2203 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.0395 |

## ஒலுவில் கிரீன் விலாவில் நினைவேந்தல் நிகழ்வு



கோணாவத்தை செய்தியாளர்

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் ஸ்தாபகரும் முன்னாள் சபாநாயகருமான எம்.ஏ.பாக்கீர் மாக்கார் மற்றும் டாக்டர் பரீட் மீராலெவ்வை ஆகியோரின் நினைவு தின நிகழ்வு ஒலுவில் கிரீன் விலா ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் மாவட்ட தலைவர் ஏ.மாபீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் தேசிய பணிப்பாளரும் மாவட்ட சாரண ஆணையாளருமான எம்.ஐ.உதுமாலெவ்வை, ஏறாவூர் பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எம்.எல்.ஏ.லத்தீப் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும் அமைப்பின் செயலாளர், பொருளாளர் உட்பட மாவட்ட பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பாக்கீர் மாக்கார் மற்றும் பரீட் மீராலெவ்வை ஞாபகார்த்த மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதேவேளை மேற்குறித்த இருவரினதும் ஆன்ம ஈடேற்றத்துக்காக மௌலவி யூ.எல்.நியாஸ் பிரார்த்தனை நிகழ்த்தினார்.

## தாபன விதிக்கோவை வலுவூட்டல் செயலமர்வு



பொத்துவில் , அம்பாறை மாவட்ட செய்தியாளர்கள்

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட சுகாதார நிறுவனங்களில் கடமை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான தாபன விதிக்கோவை தொடர்பான வலுவூட்டல் செயலமர்வு நேற்று (14) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனையின் கீழ் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.வீ.வாஜிதா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.அப்துல் வாஜித், பொத்துவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ராமகுட்டி, நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.வீ.வாஜிதா ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர்.

சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்ற குறித்த உத்தியோகத்தர்கள் அவசியம் தெரிந்திருக்க வேண்டிய நிர்வாக நடைமுறைகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள், சுகாதாரத்துறைக்கு ஆற்றவேண்டிய பணிகள் தொடர்பாகவும் வளவாளர்களினால் விளக்கமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை தரம் 03 மாணவி எம்.ஐ.ஐ.அதாபா மனாரியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ் தலைமையில் இடம்பெற்றது. இதேவேளை இப்போட்டியின் முதலாமிடத்தை அக்கரைப்பற்று வலயம் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

படம்:பொலிவேரியன் செய்தியாளர்

## மட்டு. சிறையிலிருந்து 40 கைதிகள் விடுதலை



களுதாவளை, கிரான் செய்தியாளர்கள்

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து பெண் கைதியொருவர் உட்பட 40 கைதிகள் நேற்றுமுன்தினம் (13) விடுதலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரனின் ஆலோசனைக்கமைவாக இடம்பெற்ற கைதிகள் விடுதலை நிகழ்வில் பிரதம ஜெயிலர் ஏ.பீ.பானுக தயந்த சில்வா உட்பட பலர் கலந்து கொண்டனர். சிறு குற்றம் புரிந்த அபராதத் தொகை செலுத்தாத கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## காத்தான்குடியில் திருட்டு: 04 இளைஞர்கள் கைது

### நகைகளும் மீட்பு



மட்டக்களப்பு செய்தியாளர்

காத்தான்குடி பிரதேச வீடொன்றில் கடந்த 05ஆம் திகதி இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் 04 இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டதாகவும் திருடப்பட்டதாக நம்பப்படும் நகைகள் கைப்பற்றப்பட்டதாகவும் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ்.ஏ.றஹீம் தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டீன் வீதியில் வீடொன்றின் உரிமையாளர் கொழும்புக்குச் சென்றிருப்பதை அறிந்த சந்தேக நபர்கள் கடந்த 05ஆம் திகதி வீட்டின் கூரையைப் பிரித்து உள்நுழைந்து அலுமாரியை உடைத்து தங்கநகைகள் மற்றும் 2000ரூபா பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் மேற்படி திருட்டுச் சம்பவம் குறித்து காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கிணங்க காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி றஹீம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்றுமுன்தினம் (13) மாலை மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின்போது நான்கு இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டதோடு திருடப்பட்டதாகக் கூறப்படும் நகைகள் மூதூரிலுள்ள நகைக்கடையொன்றுக்கு விற்பனை செய்திருந்த நிலையில் அவை மீட்கப்பட்டதுடன் நகை கடை உரிமையாளரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டுள்ள காத்தான்குடியைச் சேர்ந்த 23, 19, 17, 19 ஆகிய வயதுகளையுடைய நான்கு சந்தேகநபர்களையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக தெரிவித்த பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அக்கரைப்பற்று வைத்தியசாலையில் செயலமர்வும் சான்றிதழ் வழங்கலும்



அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்

சுகாதாரத்துறை சார்ந்தோருக்கான திட்டமிடல், தரமான வினைத்திறன் மிக்க சேவை மற்றும் நோயாளர் பாதுகாப்பு என்பன தொடர்பான செயலமர்வும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் கடந்த 11,12,13ஆம் திகதிகளில் இடம்பெற்றது.





அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட மருத்துவ நிர்வாகியும் வைத்திய முகாமைத்துவ விசேட நிபுணருமான விமல் கரண்டகொட பிரதம வளவாளராக கலந்து கொண்டு விரிவுரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.ரிபாஸ், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் அஸாத் எம்.ஹனிபா, பொது சத்திர சிகிச்சை நிபுணர் றிப்ஷான் ஜெமீல், வைத்திய நிபுணர்கள், பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலையின் குழு உறுப்பினர்கள் மற்றும் கல்முனைப் பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட அனைத்து தர சுகாதாரப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நோயாளி பாதுகாப்பு, சுகாதார சேவையின் தரம், உற்பத்தித்திறன் அபிவிருத்தி கையாள்கை கோட்பாட்டு முறைமைகள், கே.பீ.ஐ.முறைமை, முக்கிய அபிவிருத்திப் பணிகளை எவ்வாறு மேற்கொள்வது உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் குழுக்களாக பிரிக்கப்பட்டு விரிவுரைகள் வழங்கப்பட்டதுடன் பங்குபற்றுநர்களின் கேள்விகளுக்கும் விடையளிக்கப்பட்டன.

இப்பயிற்சிப்பட்டறையை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 61 பேருக்கு இதன்போது சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## ‘சமுர்த்தி சிசுபல’ திட்டம்

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



மாளிகைக்காடு, பொலிவேரியன் செய்தியாளர்கள்

சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ‘சமுர்த்தி சிசுபல’ திட்டத்தின் கீழ் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (13) சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவர் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 179 மாணவர்களுக்கு இதன்போது பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகள் மற்றும் சமுர்த்தி வங்கிகளின் நிதியின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் நாடளாவிய ரீதியில் 2 இலட்சம் மாணவர்களுக்கு ‘சமுர்த்தி சிசுபல’ திட்டத்தினூடாக பாடசாலை உபகரணங்களை வழங்கி வருகின்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம், முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் ஆகியோரின் வழிகாட்டலில், சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸன் கலந்து கொண்டார்.

அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.ஹிதாயா, கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச அமைப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மாணவர்களின் பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## சுற்றுலாத் துறையை மேம்படுத்தல்: பொத்துவிலில் சைக்கிள் ஓட்டப்போட்டி







அட்டாளைச்சேனை செய்தியாளர்

சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் பொத்துவில் சைக்கிள் ஓட்ட சம்மேளனமும் ஆட்டோ சங்கமும் இணைந்து நடத்திய மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி பொத்துவில் பிரதேசத்தில் இடம்பெற்றது. இப்போட்டியை பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

உடல் ஆரோக்கியத்துக்கான சைக்கிள் ஓட்ட சம்பியன்ஷிப் போட்டி எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற இச்சைக்கிள் ஓட்டப் போட்டியானது 78 கிலோமீற்றர் தூரத்தை ஓடிக் கடக்கும் போட்டியாக அமைந்தது.

அறுகம்பை பகுதியில் உள்ள வெளிநாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் உள்நாட்டு சைக்கிள் ஓட்ட வீர வீராங்கனைகள் எனப் பலர் இப்போட்டியில் கலந்து கொண்டனர். அறுகம்பை பிரதேசத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இச்சைக்கிள் ஓட்டப் போட்டியானது கோமாரி, சங்கமன்கண்டி, விநாயகபுரம், திருக்கோவில் ஆகிய பிரதேசங்கள் ஊடான பயணப் பாதையை கொண்டு, மீளவும் பொத்துவில் அறுகம்பை பகுதியை முடிவுறும் பகுதியாக கொண்டமைந்தது.

இச்சைக்கிள் ஓட்டப் போட்டியில் பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த சைக்கிள் ஓட்ட வீரர் கே.சுல்பிகார் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். இரண்டாமிடத்தை ஏ.எம்.பௌஜியும் மூன்றாமிடத்தை ஏ.ஏ.ஏ.அஷான் அஹமதும் பெற்றுக் கொண்டனர். முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட வீரருக்கு பெறுமதி மிக்க துவிச்சக்கரவண்டியும் இரண்டாமிடம் பெற்ற வீரருக்கு 20 ஆயிரம் ரூபா பணப் பரிசும் மூன்றாமிடம் பெற்ற வீரருக்கு 10 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டன.

இப்போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகவும் கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தவிசாளர் ஏ.பி.மதன், அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஜெஸ்வத் இலாஹி, ஆட்டோ சங்கத்தின் தலைவர் ஏ.முஸம்மில், பொத்துவில் சைக்கிள் ஓட்ட சம்மேளனத்தின் தலைவர் கே.சுல்பிகார், செயலாளர் ஏ.எஸ்.எம்.சலீம் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

## சாதனை மாணவிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம்



திருக்கோவில் மேலதிக நிருபர்

திருக்கோவில் வலயக் கல்வி பிரிவுக்குட்பட்ட மாணவிகள் இருவர் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்தி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

பொத்துவில் மெதடிஸ்த தமிழ் மகா வித்தியாலய மாணவி சாந்தலிங்கம் ரியோன்சியா 3 ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் 25ஆவது நிலையை அடைந்துள்ளதுடன் தமது பகுதியில் சட்டபீடத்துக்கு தகுதி பெற்ற முதல் மாணவி என்ற பெருமையையும் நிலை நாட்டியுள்ளார். இதேவேளை கோமாரி மெதடிஸ்த தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி குமாரலிங்கம் கோசாலினி 3ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் 63ஆவது இடத்தைப் பிடித்து கலைப் பிரிவுக்கு தகுதி பெற்றுள்ளார்.

இவ் இரு மாணவிகளையும் பாராட்டும் முகமாக நேற்றுமுன்தினம் (13) திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர்.உதயகுமார், பொத்துவில் கோட்டக்கல்வி (தமிழ்ப் பிரிவு) அதிகாரி ரி.உதயகுமார் ஆகியோர் அவர்களின் இல்லங்களுக்குச் தேடிச்சென்று பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

அத்துடன் திருக்கோவில் வலயத்தில் சாதனை புரிந்த ஏனைய மாணவர்களையும் நேரில் சந்திக்கவுள்ளதாகவும் திருக்கோவில் வலயக்கல்வி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## போடியார் புலம்பல்!



**மோடிய ஒன்றாக சந்திக்க முயற்சிப்போம் வாருங்கள் என யாழ் எம் பி, ஓய்வு பெற்ற நீதியரசர் விக்கினேஷ்வரன் தமிழ் கட்சி தலைவர்களுக்கு எல்லாப்பேருக்கும் அழைப்பு கொடுத்திருக்காரு எலுவா...?**

**அது சரி ஐயா நீங்க அந்த ஜனாதிபதிட ஊட்ட போய் பேசி ஏதோ நிபுணர் குழு என்று கொஞ்சப்பேரக்கொடுத்து பேய்க்காட்டினியல் எலுவா..? அதுக்கு என்ன நடந்தது எண்டதயும் அந்த 13 ம் வாய்பாட்டுக்கு என்ன நடந்தது எண்டதையும் ஒள்ளுப்பம் சொல்லுங்கவன் பாப்பம்!**

**மோடிட்ட போய் காவடி எடுக்க முந்தி ஏற்கனவே பாடிய வில்லுப்பாட்டுக்கு என்ன நடந்தது ஐயா...?**

# அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் போதைப்பொருள் அச்சுறுத்தலை முறியடிக்கலாம்

### கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ரம்ஸீன் பக்கீர் தெரிவிப்பு

*அம்பாறை மாவட்ட செய்தியாளர்*



அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டால் போதைப்பொருள் கடத்தல், வர்த்தக செயற்பாடுகளை முறியடிக்க முடியும் என கல்முனை தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி எம். ரம்ஸீன் பக்கீர் தெரிவித்துள்ளார்.

கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஆலோசனை குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஹெரோயின் உள்ளிட்ட கேரள கஞ்சா கடத்தல் நடவடிக்கை அதிகளவு இடம்பெறுகின்ற பகுதியாக கல்முனைப் பிராந்தியம் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் இந்த பகுதியில் திறமையாக கடமையாற்றுகின்ற பொலிஸார் இக்கடத்தல் முயற்சிகளை பெரும்பாலும் முறியடித்து விடுகின்றார்கள். இது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.இத்தகைய கஞ்சா வெளிநாடுகளில் இருந்து கடல்மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு இங்கே விற்பனை செய்யப்படுகின்றது. கஞ்சா பாவனைக்கு அதிகளவான இளைஞர்கள் அடிமையாகியுள்ளார்கள்.

இதேவேளை போதைப்பொருள் கடத்தல் மையமாக மாறும் அபாயத்தை இலங்கை எதிர்நோக்கியுள்ளது.அதாவது கொக்கையின் போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கையானது இலங்கைக்கு ஊடாக அதிகரித்துள்ளது. இருந்த போதிலும் அந்தக் கடத்தல் முயற்சிகளும் முறியடிக்கப்பட்டுள்ளன.

கொக்கையினானது கேரள கஞ்சாவை விடவும் அதிக மடங்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதொன்றாகும். எனவே இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறு ஒத்துழைத்தால் மாத்திரமே போதைப்பொருள் கடத்தல், வர்த்தக செயற்பாடுகளை முறியடிக்க முடியும் எனவும குறிப்பிட்டார்.

## 8 வருட மக்கள் சேவையில் நிந்தவூர் மத்தியஸ்த சபை!

நாடெங்கும் பிரதேச செயலக ரீதியாக மத்தியஸ்த சபைகள் வெற்றிகரமாக இயங்கிவருகின்றன. 1988-72 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் கீழ் நீதி அமைச்சின் கீழான மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவானது பிரதேச செயலக ரீதியாக மத்தியஸ்த சபைகளை ஸ்தாபித்து அவை மக்களுக்குப் பெரும் சேவையாற்றி வருகின்றன.

தற்சமயம் நாடளாவிய ரீதியில் 329 மத்தியஸ்த சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு மக்களுக்கு சேவையாற்றிவருவதுடன் நீதிமன்றம், பொலிஸ், நிதி நிறுவனங்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் நேரடியாகவும் இந்த சபைகளில் பிணக்குகள் ஆற்றுப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி மத்தியஸ்தர்கள் சபை குழாமொன்றின் மூலம் ஏற்படுகின்ற மத்தியஸ்தம் என்பது பிணக்கொன்று ஏற்பட்ட இரு தரப்பினர்களை கலந்துரையாடும் ஒரு செயற்பாட்டினூடாக அவ்விரு தரப்பினர்களும் திருப்தியடையக் கூடிய இணக்கமொன்றுக்கு வழிகாட்டும் செயற்பாடாகும்.

மூன்று வருட சேவைக்காலத்தைக் கொண்ட மத்தியஸ்த சபைகள் நாட்டில் வெற்றிகரமாக செயற்பட்டு மக்கள் அபிமானத்தையும் வென்று திருப்திகரமான சேவைகளை ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில் அம்பறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேச சபைப் பிரிவில் இயங்கிவரும் நான்காவது மத்தியஸ்த சபை தமது எட்டு வருட பதவிக்காலத்தை சிறப்புடன் நிறைவு செய்துள்ளது.

இந்த சபை நாட்டின் பல்வேறு நெருக்கடி நிலைமைகள் காரணமாகவும் பதவிக்காலம் முடிவுற்றும் தொடர்ச்சியான சேவையை முன்னெடுத்துவருவதுடன் 15.09.2023 எட்டு வருடங்களையும் நிறைவு செய்துள்ளது.

ஓய்வுபெற்ற கணிதப்பாட ஆசிரியையான பல்கீஸ் அப்துல் மஜீத்தை தவிசாளராகவும் ஓய்வுநிலை அதிபர் யூ.எல்.ஏ.முபாரக்கை உப தவிசாளராகவும் கொண்டு 27 மத்தியஸ்த குழு உறுப்பினர்களுடன் 15.09.2015 அன்று இந்த நான்காவது மத்தியஸ்த சபை ஸ்தாபிக்கப்பட்டு இயங்கத் தொடங்கியது.

இதனையடுத்து சுமார் 8 மாதங்களின் பின்னர் மேலும் 4 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு 31 பேர் கொண்ட மத்தியஸ்த குழு உறுப்பினர்களுடன் சேவை தொடர்ந்தது.எனினும் தற்சமயம் 27 குழாம் உறுப்பினர்களுடன் சேவை தொடர்ந்து வருகின்றது.இதில் மத்தியஸ்தர்களாக 22ஆண்களும் 05 பெண்களும் அடங்குகின்றனர்.

ஆரம்பத்தில் தவிசாளர் பல்கீஸ் அப்துல் மஜீத் தானொரு பெண்ணாகவிருப்பதால் சபைக்கு தலைமை தாங்குவது குறித்து சற்றுத் தயக்கமும் சலனமும் கொண்டிருந்தபோதிலும் உப தவிசாளர் யூ.எல்.ஏ.முபாரக் மற்றும் சக உறுப்பினர்கள் வழங்கிய ஒன்றுபட்ட ஆதரவும் ஊக்கமும் அவரது சிறந்த தலைமைத்துவ செயற்பாட்டுத் திறனை கடந்த எட்டு வருட காலமும் மிளிரச் செய்து மக்களின் பாராட்டையும் பெறச் செய்துள்ளது.

அவருடைய தலைமைத்துவ ஆளுமை, நிருவாகத்திறன் காரணமாக மிகுந்த ஒற்றுமையுடனும் கூட்டுப் பொறுப்புடனும் சகல மத்தியஸ்தர்களும் திகழ்ந்து வெற்றிகரமான மக்கள் சேவையை முன்னெடுத்து வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

பெண்களாலும் இத்தகைய பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்து சாதிக்க முடியுமென்ற முன்னுதாரணமிக்கவராக தவிசாளர் பல்கீஸ் திகழ்ந்து நிரூபித்துள்ளார்.

மேலும் இச்சபையின் சிறந்த செயற்பாட்டுக்கு வினைத்திறனான சேவைக்கும் அடிக்கடி ஆலோசனைகளையும் ஊக்குவிப்பையும் வழங்கிவரும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கான மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் மத்தியஸ்த பயிற்றுநர் எம்.ஐ.எம்.ஆஸாத்தையும் இங்கு குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளோம்.

அதேவேளை சபைக்கென நியமனம் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பாத்திமா சாமிலாவின் ஒத்துழைப்பும் உந்துசக்தியாக அமைந்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

31.12.2019 வரை 125 எஞ்சியிருந்த பிணக்குகளைப் பெற்றுக் கொண்ட இச் சபைக்கு 2020 முதல் 2023 செப்டெம்பர் 15 வரை 657 பிணக்குகள் கிடைத்தன.

இதில் பிணக்காளிகளின் 153 நேரடி பிணக்குகளும் வங்கிகளின் 182, பொலிஸ் நிலையங்கள் மூலம் 100, நீதிமன்றத்திலிருந்து 69, மீறுகை 28 என ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தன.

இக்காலப்பகுதியில் 209 பிணக்குகள் இணக்கம் காணப்பட்டுள்ளதுடன் 294 பிணக்குகள் இணக்கம் காணப்படாதவையாகவும் 20 பிணக்குகள் வாபஸ் பெறப்பட்டுமுள்ளன.

இச்சபையின் தவிசாளராக ஒரு பெண் இருந்து வந்தது மட்டுமன்றி மேலும் 5 பெண் உறுப்பினர்களும் இந்த மத்தியஸ்த குழுவில் அங்கம் வகித்தமையும் இந்து ஆலயத்தலைவர் ஒருவரும் உட்பட்டிருந்தமையும் சிறப்பம்சமாகும்.

மேலும் தவிசாளர் பல்கீஸ் அப்துல் மஜீத் இக்காலத்தில் எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக சபை எதிர்நோக்கிய பௌதிகவளப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் எட்டப்பட்டன.

இவ்வாறெல்லாம் சிறப்புடன் முன்னெடுக்கப்பட்டு அரும்பெரும் சேவையாற்றும் நிந்தவூர் மத்தியஸ்த சபைக்கென நிரந்தரக்கட்டிடமொன்று இல்லாமையும் மிக முக்கிய பிரச்சினையாக நீடித்து வருகின்றது.

எதிர்காலத்திலாவது இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட சம்பந்தப்பட்டோர் ஆவன செய்ய வேண்டும் என்பதை இந்த எட்டு வருடகால நிறைவிலும் வலியுறுத்துவோம்.

மேலும், சபை அமர்வுகளின்போது செயலாளராக இயங்கும் ஏ.எம்.எம்.மன்சூரின் பணிகளைப் பாராட்டுவதுடன் நற்சேவை புரிந்து எட்டு வருட நிறைவு கண்ட நிந்தவூர் மத்தியஸ்த சபை தவிசாளர், உப தவிசாளர் மற்றும் மத்தியஸ்த குழு உறுப்பினர்கள் பாராட்டுக்குரியவர்கள் என்றால் மிகையாகாது.

மத்தியஸ்தம் பிணக்குக்கும் தீர்வு மனதுக்கும் நிம்மதி!எமது பிணக்குகளை நாமே தீர்த்துக் கொள்வோம்.

**ஏ.எல்.எம்.சலீம் -**
***மத்தியஸ்த சபை உறுப்பினர்***

## ஹெரோயின் போதைப்பொருள்: சந்தேக நபரொருவர் கைது

*அப்துல்சலாம் யாசீம்*

திருகோணமலை- கந்தளாய் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபரொருவரை கைது செய்துள்ளதாக கந்தளாய் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் திருகோணமலை பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைவாக மேற்படி பகுதியில் வைத்து குறித்த சந்தேக நபரை சோதனையிட்ட போது அவரிடமிருந்து 5 கிராம் 700 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கந்தளாய்- முதலாம் கொலனியில் வசித்து வரும் 44 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் கந்தளாய் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## மொறவெவவில் பயிற்சிப்பட்டறை





*அப்துல்சலாம் யாசீம்*

பாரம்பரிய கிராம மட்ட அமைப்புக்களை பலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மனித உரிமை மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டங்கள் குறித்து தெளிவுபடுத்தும் நான்காவது பயிற்சிப்பட்டறை நேற்று (14) வியாழக்கிழமை மொறவெவ பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இப்பயிற்சிப் பட்டறையில் மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், AHRC நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் மற்றும் சக ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் இசைடீன் வளவாளராகக் கலந்து கொண்டு மனித உரிமைகள் தொடர்பாக விளக்கமளித்தார்.




***தென்கிழக்குப்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று கவன ஈர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டனர். சங்கத்தின் தலைவர் கலாநிதி எம்.ஐ.எம்.ஜெஸீல் தலைமையில் பல்கலைக் கழக முன்றலில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.***

**படம்:மாவடிப்பள்ளி செய்தியாளர்**

## சம்மாந்துறையில் கருத்தரங்கு

*இஸ்மாயில்புரம் செய்தியாளர்*

அண்மையில் வெளியான 2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 2022/23 கல்வியாண்டுக்காக அரச பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தற்பொழுது கோரப்பட்டுள்ளன.

இந்நிலையில் பரீட்சையில் தோற்றி சித்தி பெற்ற மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி மற்றும் இலக்கை நோக்கிய திடமான பயணம் என்பவற்றுக்கான வழிகாட்டல் கருத்தரங்கொன்றை நிகழ்நிலை ஊடாக சம்மாந்துறை நலனுக்கும் அபிவிருத்திக்குமான பேரவையும் சம்மாந்துறை இளமாணிப்பட்டதாரிகள் அமைப்பும் இணைந்து நாளை மறுதினம் (17)காலை 8.30 மணிக்கு சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இம்முறை பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்துள்ள மாணவர்கள் மற்றும் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தி அடைந்த(3எஸ்) மாணவர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# மாணவி தூக்கிட்டு தற்கொலை

### காஞ்சிரங்குடாவில் சம்பவம்

*மண்டூர் செய்தியாளர்*

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரங்குடா பிரதேசத்தில் மாணவியொருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காஞ்சிரங்குடா, குருந்தையடிமும்மாரி பிரதேசத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி ரணித்தா (வயது 16) என்பவரே இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டவராவார்.

சம்பவ தினம் வழமை போல பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பிய நிலையில் தாயாரிடம் கையடக்க தொலைபேசியை கேட்ட போது யுவதியின் தாயார் தொலைபேசியை கொடுக்க மறுத்துள்ளதாக தெரியவருகிறது.இந்நிலையில் தாயார் உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று வீடு திரும்பியபோது மேற்படி மாணவி வீட்டின் அறையினுள் தூக்கிட்ட நிலையில் காணப்பட்டார். இந்நிலையில் தாயின் உறவினர்கள் மாணவியை மீட்டெடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் சிகிச்சை பலனின்றி மாணவி உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும் படி சட்ட வைத்திய அதிகாரிக்கு பணிப்புரை விடுத்ததுடன் விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கும் படி பொலிஸாருக்கும் உத்தரவிட்டார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் முன்னெடுத்தனர்.

## தமிழ் மக்களோடு வழிபாட்டில் பங்கேற்ற சிங்கள விவசாயிகள்!



*(கிண்ணியா நிருபர்)*

திருகோணமலை - பன்குளம் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பன்குளம் பிள்ளையார் ஆலயத்தில் இம்முறை சிறுபோக விவசாய நடவடிக்கைகள் சிறப்பாக முடிவுற்றமைக்கு நன்றி தெரிவித்து பூசைவழிபாடுகளையும் பொங்கல் நிகழ்வுகளையும் நேற்றுமுன்தினம் (13) சிறப்பாக நடத்தினர்.

இந்நிகழ்வில் தமிழர்களோடு சிங்கள விவசாயிகளும் இணைந்துகொண்டமை சிறப்பம்சமாகும்.

**கல்முனை மாநகர**

# பாடசாலைகளில் திண்மக்கழிவகற்றல் சேவையை மேம்படுத்த நடவடிக்கை

*சாய்ந்தமருது, அம்பாறை மாவட்ட செய்தியாளர்கள்*




கல்முனை மாநகராட்சி எல்லையினுள் அமைந்துள்ள அரச பாடசாலைகளில் திண்மக் கழிவகற்றல் சேவையை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டம் புதன்கிழமை (13) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜெளஸி, திண்மக் கழிவகற்றல் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது பாடசாலைகளில் திண்மக்கழிவகற்றலை மேற்கொள்ளும் போது எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் மற்றும் ஆலோசனைகளை அதிபர்களிடம் கேட்டறிந்து கொண்ட மாநகர ஆணையாளர், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் பற்றியும் தெளிவுபடுத்தினார்.

திண்மக்கழிவகற்றல் சேவையின்போது மாநகர சபையினால் வகுக்கப்படும் பொறிமுறைகளுக்கேற்ப திண்மக் கழிவகற்றல் வாகனங்களில் குப்பைகள் ஒப்படைக்கப்படுமாயின் பாடசாலைகளில் இருந்து அவற்றை இலகுவாக அகற்றிக் கொள்ள முடியும் எனவும் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக உக்கும் கழிவுகள் மற்றும் உக்காத கழிவுகள் என குப்பைகளை வகைப்படுத்தி வெவ்வேறு பைகளில் சேகரித்து வைக்க வேண்டும் எனவும் அவற்றை பாடசாலைகளின் நுழைவாயில்களில் வைத்து தாமதமின்றி உரிய நேரத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

இதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக குப்பைகளை வகைப்படுத்தி சேகரிப்பதற்கான பைகள் அனைத்து பாடசாலைகளுக்கும் மாநகர சபையினால் இதன்போது இலவசமாக வழங்கப்பட்டன.

# அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்






*திராய்க்கேணி நிருபர்*

அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் (13) இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். எம். ஹரீஸ், பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அஹமட் சாபிர், உதவி பிரதேச செயலாளர் நஹிஜா முசாபிர், பிரதேச சபை செயலாளர் எஸ். ஏ. பாயிஸ்,உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல்.மஜீத், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் ஜே.எம்.வாஸிர் , பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் எஸ்.ஏ. பாயிஸ், பாராளுமன்ற உறுப்பினர் முஷாரபின் இணைப்பாளர் எஸ். எம். எம். அறூஸ், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி எம். இஸ்மாயில், அக்கரைப்பற்று வலயக்கல்வி பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். ரஹ்மத்துல்லாஹ், அட்டாளைச்சேனை கோட்டக்கல்வி அதிகாரி எம். எச். ரஸ்மி, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் ஏனைய திணைக்களத் தலைவர்கள், அட்டாளைச்சேனை, திராய்க்கேணி, ஒலுவில்,பாலமுனை, ஆலம்குள கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டு தங்களது காத்திரமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்தனர். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி திணைக்களத் தலைவர்கள் எதிர்காலத்தில் துரிதமாக தங்களது பணிகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் வேண்டிக்கொண்டார் .

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk thamilaneditor@gmail.com

# நிலையான வளர்ச்சிக்கான ஐக்கியம்: முதலாவது கார்பன்-நடுநிலை சர்வதேச பேண்தகைமை உச்சிமாநாட்டை நிறைவு செய்த ஹேலீஸ்

முற்போக்கான தோட்ட நிர்வாகத்தில் உலகளாவிய முன்னணி நிறுவனமான ஹேலீஸ் பிளான்டேஷன்ஸ் BMICH இல் முதலாவது கார்பன்-நடுநிலை சர்வதேச தோட்டங்களின் பேண்தகைமை உச்சிமாநாட்டை (IPSS) வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

நாள் முழுவதும் நடைபெற்ற இந்த மாநாட்டிற்கு இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள பெருந்தோட்டங்கள், விவசாயம் மற்றும் பேண்தகைமை நிபுணர்களின் ஈர்க்கக்கூடிய வரிசையை ஒன்றிணைத்து வளர்ந்து வரும் சிறந்த நடைமுறைகள் மற்றும் விவசாய நிர்வாகம் மற்றும் மனித வளங்களில் புத்தாக்கமான முன்னேற்றங்களை அடுத்த சதாப்தத்திற்கு பகிர்ந்து கொண்டது.

இந்த மாநாட்டிற்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த ஹேலீஸ் குழுமத்தின் பிரதானியும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹான் பண்டித்தகே, சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பங்குபற்றிய அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார். “GDP மற்றும் ஏற்றுமதி வருவாய்க்கு பங்களிக்கும் பெருந்தோட்டத் தொழிற்றுறையின் முக்கியத்துவம் மிகைப்படுத்த முடியாதது. அதன் பொருளாதார தாக்கத்திற்கு அப்பால் அது நமது சக குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் மற்றும் நமது நாட்டின் அழகிய இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.”

“Hayleys இல் நாட்டின் தேயிலை உற்பத்தியில் சுமார் 4.6% மற்றும் இறப்பர் உற்பத்தியில் 4.7% பங்களிப்பதில் பெருமை கொள்கிறோம். எமது தோட்டங்களை நாங்கள் நடத்தும் நெறிமுறை மற்றும் நிலையான வழி, Hayleys இலங்கையின் முதல் நிறுவனமாக தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக தரவரிசைப்படுத்தப்படுவதற்கும் Fitch இன் மதிப்புமிக்க AAA மதிப்பீட்டிற்கு பங்களித்துள்ளது. இன்று ஒன்றிணைந்து அதிக மாற்றத்தை உருவாக்குவதற்கான ஒரு தனித்துவமான தளமாக செயற்படுகிறது. மேலும், அனைத்து பங்கேற்பாளர்களும் மிகவும் நெகிழ்வான தொழில்துறையை நோக்கி பரிந்துரைகள் மற்றும் செயல்களில் கவனஞ்செலுத்த ஊக்குவிக்கிறேன்.” - எனத் தெரிவித்தார்.

கூட்டத்தில் உரையாற்றிய ஹேலீஸ் பிளான்டேஷன்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி ரொஷான் ராஜதுரை, பேண்தகைமையான எதிர்காலத்திற்காக அறிவைப் பகிர்ந்து கொள்ளவும் ஒத்துழைக்கவும் உச்சிமாநாடு ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கியது எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், “சிலோன் தேயிலைக்கு 150 வருட பாரம்பரியம் உள்ளது, மற்றும் நாம் உலகின் தேயிலை தேசமாக முத்திரை குத்தப்பட்டுள்ளோம். தொழில்துறையில் ஏற்படும் சவால்கள் மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர்த்துப் போராட காலநிலை-புத்திசாலித்தனமான மற்றும் புத்தாக்கமான விவசாய நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவது அவசியம்.








“IPSS இல் தொழில் நிபுணர்கள் மற்றும் பங்குதாரர்களை நாங்கள் சேகரிக்கும் போது, முதல் முறையாக ஒரு சக்திவாய்ந்த அறிவுப் பகிர்வு முயற்சியை நாங்கள் காண்கிறோம். முன்னோக்கிச் செல்லும்போது இந்தக் கற்றல்களை எடுத்துக்கொண்டு முழுத் தோட்டத் துறையையும் நெறிமுறை நடைமுறைகள், சுற்றாடல் பொறுப்புணர்வு மற்றும் நெகிழ்ச்சியான வளர்ச்சி ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட மிகவும் வளமான மற்றும் சமமான எதிர்காலத்தை நோக்கி வழிநடத்துவதே எங்களின் இலக்காகும்” - எனத் தெரிவித்தார்.

‘பேண்தகைமையான தோட்டங்களை நோக்கி - மறுவடிவமைப்பு | மீண்டும் கற்பனை செய்தல் மற்றும் மீள்தன்மை எனும் தொனிப்பொருளில் ஐக்கிய நாடுகளின் பேண்தகைமையான வளர்ச்சி இலக்குகளுக்கு (SDGs) இணங்க ஒவ்வொரு வணிக முடிவுகளிலும் சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாகக் கருத்தாய்வுகளை ஒருங்கிணைப்பதை இந்த உச்சிமாநாடு வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மாநாட்டு பேச்சாளர்கள், காடு வளர்ப்பு, காலநிலை-மீள்திறன் விவசாயம், புத்திசாலித்தனமான மற்றும் துல்லியமான விவசாயம், கார்பன் வரிசைப்படுத்துதல் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு போன்ற பல்வேறு விடயங்களில் நிபுணர்கள் ESG மற்றும் பேண்தகைமை, அறிவு முகாமைத்துவ நடைமுறைகளின் ஒருங்கிணைப்பு தரவு உந்துதல் பேண்தகைமை, பேண்தகைமையான நிதியுதவி ஆகியவற்றில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்தனர்.

புத்தாக்கமான தோட்ட உற்பத்தி முறைகள் மற்றும் புதிய வணிக மாதிரிகளுக்கான வாய்ப்புகளை நோக்கிய பேண்தகைமை அணுகுமுறைகள் குறித்த உலகளாவிய போக்குகள் என்ற தொனிப்பொருளில் முக்கிய உரையை ஆற்றி, உலக வள நிறுவனத்தின் (WRI) இந்தியாவின் பணிப்பாளர் மற்றும் வியூகத் தலைவர் டாக்டர் ஏ. நம்பி அப்பாத்துரை கூறுகையில், “காலநிலை மாற்றம் என்பது அனைத்து அச்சுறுத்தல்களுக்கும் தாய். நிச்சயமற்ற தன்மை மட்டுமே உறுதி. இது உலகில் உள்ள ஒவ்வொரு பயிரையும் பாதித்துள்ளது. இந்தச் சவால்களை நாம் சந்திக்க வேண்டுமானால், அதன் தாக்கத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதில் சுற்றுச்சூழல் மாற்றங்கள் மட்டுமல்ல, அதன் சமூகத் தாக்கமும் அடங்கும். இன்றைய தீர்வுகள் எதிர்காலத்தில் பயனுள்ளதாக இருக்காது. மேலும் யாரும் பின்தங்கியிருக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்த நமது தகவமைப்பு திறன்களை மேம்படுத்துவது அவசியம்”

இதேபோல் Regenerative Agriculture (RA) - தோட்டங்களில் மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான நிலையான அணுகுமுறை என்ற தலைப்பில் விருந்தினர் உரையை ஆற்றிய நெதர்லாந்தின் Wageningen பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விஞ்ஞானி டொக்டர். Mirjam Pulleman கூறுகையில், “மீளுருவாக்கம் செய்யும் விவசாயத்தை (Regenerative Agriculture) வற்றாத பயிர்களுடன் ஒருங்கிணைப்பது பல அமைப்புகளைப் பாதிக்கும் திறன் கொண்டது. தோட்டங்களை அதிக நெகிழ்ச்சியுடன் வலுப்படுத்துகிறது, மற்றும் அபாயங்களைக் குறைக்கிறது. இது உண்மையில் தொழில் முழுவதும் நிலைத்தன்மைக்கு அவசியம்” எனத் தெரிவித்தார்.

சுற்றாடல் பொறுப்பு மற்றும் காலநிலை நடவடிக்கையை ஏற்றுக்கொண்டு Hayleys Plantations துறையானது இலங்கை காலநிலை நிதியத்தின் ஊடாக 15 tCO2e (தொன் கார்பன் தடம்) ஈடுசெய்ததன் மூலம் நிகழ்விற்கான அதன் கார்பன் தடயத்தை அளவிட்டு, சரிபார்த்து மற்றும் ஈடுசெய்தமை குறிப்பிடத்தக்கது.

ஹேலீஸ் பிளான்டேஷன் தொடர்பாக:
Kelani Valley Plantations PLC (KVPL), Talawakelle Tea Estates PLC – (TTE PLC) மற்றும் ஹொரண பிளான்டேஷன்ஸ் PLC (HPL) ஆகியவற்றை உள்ளடக்கிய ஹேலிஸ் பிளான்டேஷன்ஸ்இ சுமார் 26இ137 ஹெக்டேர் நிலப்பரப்பில் 60 தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களைக் கொண்டுள்ளது. பேண்தகைமையின் முன்னோடிகளாக அவர்கள் பெருந்தோட்டத் தொழிற்துறையில் நேர்மறையான மாற்றத்தையும் புத்தாக்கத்தையும் ஏற்படுத்த உறுதிபூண்டுள்ளனர்.

சர்வதேச பேண்தகைமை உச்சி மாநாடு தொடர்பாக:
சர்வதேச பேண்தகைமை உச்சி மாநாடு என்பது உள்ளூர் மற்றும் உலகளாவிய நிபுணர்களை ஒன்றிணைத்து அவர்களின் நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்வதற்கும் பெருந்தோட்டத் துறையில் அதிநவீன புத்தாக்கங்களை வெளிப்படுத்துவதற்கும் ஒரு மன்றமாகும். “பேண்தகைமையான தோட்டங்களை நோக்கி - மறுவடிவமைப்பு | மீண்டும் கற்பனை செய்தல் மற்றும் மீள்தன்மை” என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த உச்சிமாநாடு பேண்தகைமையான வளர்ச்சி மற்றும் பங்குதாரர்களிடையே ஒத்துழைப்புக்கான புதிய பாதைகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# லீடர் நிறுவனத்தின் ஜப்பானிய தொழிற்றுறை வரையறைகளை விஞ்சிய புதிய தரநிலைகள்

இலங்கையின் புகழ்பெற்ற மின்கல உற்பத்தியாளரான லீடர் நிறுவனம், ஆர்தர் சி. கிளார்க் நவீன தொழில்நுட்பங்களுக்கான நிறுவனமிடமிருந்து (ACCIMT) உள்ளூரில் முதல் முறையாக தயாரிக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப மின்கல திறன் சோதனை இயந்திரத்தைப் பெற்று ஒரு புதிய தொழில்துறை அளவுகோலை அமைத்துள்ளது.

ACCIMT நாட்டில் உள்ள ஒரு மின்கல உடனான இந்த கூட்டாண்மை இலங்கையை உயர் தொழில்நுட்ப மையமாக மாற்றுவதற்கான ஒரு படியாகும். எங்கள் மின்கலங்களில் உள்ள சில்வர்செல் தொழில்நுட்பம் மற்றும் இந்த புதிய சோதனை கருவி எங்கள் மின்கலங்கள் ஜப்பானிய தொழில்துறை தரத்தை மீற உதவும்.

ACCIMT இன் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளர் நாயகமுமான கலாநிதி சனத் பனவென்னகேஇ நாட்டின்




உற்பத்தியாளருக்கு இத்தகைய அதிநவீன சோதனைக் கருவியை தயாரித்தது இதுவே முதல் முறையாகும்.

இந்த அதிநவீன கருவியானது லீடர் மின்கலங்களுக்கு பல்வேறு முக்கியமான அளவுருக்களில் ஜப்பானிய தொழில்துறை தரநிலைகளை (JIS) பூர்த்தி செய்ய மட்டுமல்லாமல், அதை விஞ்சவும் வாடிக்கையாளர்களுக்கு உயர்தர மின்கலங்களை வழங்கவும் உதவுகிறது.

லீடர் மின்கலங்களின் சோதனை முடிவுகள் JIS நிர்ணயித்த அளவுகோல்களுக்கு அப்பாற்பட்டவை.

**1. குளிர் கிராங்கிங் ஆம்பியர்ஸ் Cold Cranking Amperes):** குளிர் கிராங்கிங் ஆம்பியர்ஸ் (CCA) வழங்குவதன் மூலம் லீடர் மின்கலங்கள் குறிப்பிடத்தக்க செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளன. CCA ஆனது குளிர் நிலைகளில் ஓர் இயந்திரத்தை இயக்கும் மின்கலங்களின் திறனை அளவிடுகிறது. மேலும் லீடர் மின்கலங்கள் தீவிர நிலைகளில் தங்கள் திறமையை நிரூபித்துள்ளன.

**2. இருப்புத் திறன் (Reserve Capacity):** தரநிலைகளை மிஞ்சும் ஓர் இருப்புத் திறனுடன் லீடர் மின்கலங்கள் தீவிர சூழ்நிலைகளிலும் நீடித்த செயற்பாட்டை உறுதி செய்கின்றன.

**3. நீண்ட ஆயுள்:** லீடர் மின்கலங்களின் ஆம்பியர் ஹவர் மதிப்பீடு (Ampere Hour ratings) அவற்றின் சகிப்புத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையைக் காட்டுகிறது. அவை JIS தரநிலைகளை விஞ்சி நுகர்வோருக்கு நீண்ட கால பயன்பாட்டிற்கு உத்தரவாதம் அளிக்கின்றன.

லீடர் குழுமத்தின் தலைவர் கலாநிதி ஷ்ரியந்தே குரே இந்த சாதனை குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

நாளைய தொழில்நுட்பத்தின் மூலம் உலகத்தை மேம்படுத்துவதே எங்கள் நோக்கம்.

கலாநிதி பனவென்னகேயின் தொலை நோக்கு தலைமையின் கீழ் ACCIMT பொருளாதாரத்திற்கு இந்த சாதனையின் சாதகமான தாக்கங்களை எடுத்துரைத்தார்.

நாட்டின் பொருளாதார மாற்றம் தொடர்பான உரையாடலில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்ட முக்கிய புள்ளிகளில் ஒன்று நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு ஆகும். இலங்கை வர்த்தகத்தின் வெற்றியானது ஏற்றுமதி உற்பத்தி செயல்முறைக்கு நாம் எவ்வளவு உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தது.

அவர் குறிப்பிட்டார், “லீடர் மின்கலங்கள் உயர் தொழில்நுட்ப உற்பத்தி செயல்முறைகளை ஒழுங்குபடுத்தி உலகளாவிய சந்தைகளுக்கு தயாரிப்புகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், இந்தப் பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் உள்ள உற்பத்தியாளர்களுக்கு சந்தைப்படுத்தப்படும் அளவுக்கு திறன் கொண்டது.

லீடர் நிறுவனம் அதன் தயாரிப்புகளை கைஜி, ரியெல்டா, ஈஎஸ்டீ, தாரா மற்றும் எனர்க் 1 (aijie, Riyelta, ESDEE, Dhara, and Energ1) என்ற பெயர்களில் வழங்குகிறது.

லீடர் குழுமத்தின் துணை நிறுவனமான லீடர் கைஜி மின்கல நிறுவனம், மின்கல தயாரிப்பில் நிபுணத்துவம் பெற்ற தனது பயணத்தை 2016 இல் தொடங்கியது. லீடர் கைஜி மின்கலங்கள் ISO 9001:2015 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது. தெற்காசியாவில் கணிசமான சந்தைப் பங்கைக் கொண்டு முன்னணி மின்கல உற்பத்தி நிறுவனங்களுடன் பெருமையுடன் நிற்கிறது. நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள 1,200க்கும் மேற்பட்ட விநியோகஸ்தர்களின் வலையமைப்பிலிருந்து வாடிக்கையாளர்கள் லீடர் மின்கலங்களை வாங்க முடியும்.

# பேரவாவியை பாதுகாப்போம் கருத்திட்டம் ஆரம்பம்

கொழும்பு மாநகரின் மத்தியில் அமைந்திருக்கும் பேரவாவி மற்றும் பேர வாவி கால்வாயை தூய்மைப்படுத்தி அபிவிருத்திசெய்யும் ‘பேரவாவியைப் பாதுகாப்போம்’ கருத்திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் கடந்த 07 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியளவில் பேரவாவி சீமாமாலக்கவில் இடம்பெற்றது.

இவ்வைவம் கங்காராம விகாராதிபதி கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரரின் ஆசீர்வாதத்துடனும் பிரதமரும் பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் துறைமுகங்கள், கப்பல்துறை, விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் ஆகியோர் பங்குபற்றினர். அத்தோடு, சுமார் 150 உள்நாட்டு, வெளிநாட்டு அதிதிகளும் இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம், இலங்கை துறைமுக அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி மற்றும் கொழும்பு மாநகர சபை ஆகிய நிறுவனங்களால் இந்த அபிவிருத்தி வேலைத்திட்டம் கண்காணிக்கப்பட்டது. அந்நிறுவனங்களினால் பெயரிடப்படும் பிரதிநிதிகள் குறித்த கருத்திட்ட நிறுவனத்திற்கு வேலைத்திட்டத்திற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வசதிகளைச் செய்துகொடுக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

Groepo (Pvt) Ltd. நிறுவனத்தின் உள்நாட்டு கம்பனியான Groepo Lanka Bioscience (Pvt) Ltd இக்கருத்திட்டத்தை செயற்படுத்தியது.

மனிதர்களின் தவறான செயற்பாடுகள் காரணமாக அரை நூற்றாண்டு காலமாகக் கட்டம் கட்டமாக மாசடைந்துவரும் பேரவாவியின் நீரைத் தூய்மைப்படுத்தி அதன் துர்நாற்றத்தை நீக்குவதற்கும் அதனைத் தொடர்ந்து பேணுவதற்கும் நீரின் தரத்தைப் பராமரிப்பதோடு அதனை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கும் இக்கருத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பட்டு இவ் வேலைத்திட்டத்திற்கு இணையாக பேர வாவிக்கு மலசல கூட கழிவு நீர் மற்றும் திண்மக் கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்தும் வழிகளை அடையாளம் கண்டு அவற்றுக்கு மாற்று முறைமைகளை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இலங்கை அரசாங்கத்தின் எவ்வித நிதி முதலீடுகளுமின்றி முன்னெடுக்கப்பட்ட இக்கருத்திட்டம், இந்நாட்டுக்கு நன்றிக்கடனாகவும் தற்போதைய நிதி நெருக்கடியிலிருந்து மீட்சி பெறுவதற்கான ஒத்துழைப்பாகவும் ஜப்பான் அரசாங்கம் அளிக்கும் பரிசாகும்.






ஜப்பான் எப்போதும் இலங்கைக்கு உண்மையான நண்பனாக செயற்பட்டு வருகின்றது. 1951 செப்டெம்பர் மாதம் 06 ஆம் திகதி சான்பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதியும் அன்றைய நிதியமைச்சருமான ஜே.ஆர்.ஜயவர்தன ஜப்பானுக்கு ஆதரவாக ஆற்றிய சொற்பொழிவையும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை நிதி நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்காக முன்னெடுக்கப்படும் முயற்சிகளைப் பாராட்டும் வகையிலும் இந்த ஒத்துழைப்பு நல்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.